www.padippakam.com

T. Nadarajah
CHIEF EDITOR,
PUTHIYA SAMA DHARMAM,
143/4, KEW ROAD,
COLOMBO - 2.

புதிய சமதர்மம்

PUTHIYA SAMADHARMAM

පුදිය සමධර්ම්

இதழ் - 26 | விலை : ரூபா 10.00 | மார்ச் 2000 | பக்கங்கள் 12

உள்ளே :
- பண்டாரநாயக்க முதல் சந்திரிகா வரை....
- திராவிட இயக்கம் - ஒரு எக்ஸ்ரே
- வீட்டு வாடகைக் கொள்ளை
- இனவாதம், பெண்கள், வன்முறை

# சந்திரிகாவை நம்ப வேண்டாம்!

## சந்திரிகா - ரணில் சதுரங்கம் தொடர்கிறது

**ஜனாதிபதி சந்திரிகா மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளது ஏதோ உண்மை யாயினும், அவரை நம்பிக் கெட்டது போதும் எனும் உணர்வலைகள் தான் பரவலாகக் காணப்படுகின்றன. எந்த வித தயக்கமோ தயவுதாட்சணியமோ இன்றி வறிய மக்கள் மீது மேலும் வறுமையைச் சுமத்துவதில் பொதுஜன முன்னணி ஈடுபட்டிருப்பது யாவரும் அறிந்ததாகும். அண்மையில் மண்ணெண்ணெய், டீசல் விலைகள் உயர்த்தப்பட்டதை எடுத்துக் கொண்டால், அதனால் எற்பட்ட பல்முனைப்பட்ட வாழ்க்கைச் செலவு உயர்வுகள் காரணமான தாக்கங்களினால் சனத்தொகை விகிதாசார அடிப்படையில் கூடுதலான எண்ணிக்கையில் பாதிக்கப் படுபவர்கள் சிங்கள மக்கள் ஆகும் என்பதை சொல்லத் தேவையில்லை.**

எனவே பொருளாதார ரீதியில் பார்க்குமிடத்து சிங்கள பேரின வாத முதலாளித்துவ அரசாங்க மொன்று சிங்கள மக்களைத்தா னும் பேணிக் காப்பாற்றும் என் பது ஒரு மாயைதான்.



அடுத்ததாக முழுநாட்டின் பொரு ளாதார வளர்ச்சியையுமே அமிழ்த் திக் கொண்டிருக்கும் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விட யத்தில், சந்திரிகா அரசாங்கத்தை நம்பி ஏமாற வேண்டாம் என்பதே பரவலாக அரசியல் விமர்சகர் களின் கருத்தாகும். நாட்டினை உலுக்கிக் கொண்டிருக்கும் இப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு அவ சியம் என்பது யாவரும் அறிந்த விடயமாகும். அல்லாவிட்டால் கொடிய யுத்தத்தினை முடிவுக்கு கொண்டுவர முடியாது. யுத்தத் தினை மேலும் தீவிரப்படுத்தி தமி ழீழ விடுதலைப்புலிகளை தோற் கடித்து விட்டால் தான் விரும்பிய உப்புச்சப்பற்ற அரசியல் தீர்வு ஒன்றினை திணித்துவிடலாம் என்ற நம்பாசையும் சந்திரிகா அரசாங் கத்தினை விட்டகலவில்லை.

நிற்க, சந்திரிகா அரசாங்கத்திற்கு தேசிய இனப்பிரச்சினைக்கு நிறை வான அரசியல் தீர்வு ஒன்றினைக் காண வேண்டுமென்ற அக்கறை யிருந்தால், ஒரு ஆக்கபூர்வமான அர்த்தபுஷ்டியான தீர்வுத்திட்டத் தினை அரசாங்கமே முன்வைக்க வேண்டும். அதனை விடுத்து எதிர்க்கட்சியின் ஒத்துழைப்பு கிடைக்கவில்லையே என குற்றச் சாட்டுக்கள் பரிமாறிக் கொண்டி ருந்தபடியாலேயே ஆறு வருடங்க ளாக இப்பிரச்சினையானது இழுத் தடிக்கப்பட்டு வந்தது. இன்றும் அதே நாடகம் தான் தொடர்கிறது. அப்படியானால் பிறநாடுகளின் அழுத்தங்களினாலோ அனுசரணை களினாலோ எதுவித பிரயோசன மும் வரப்போவதில்லை. ஐக்கிய தேசியக் கட்சியுடனான கருத் தொருமிப்பு இன்றி அனுசரணை யாளராகச் செயற்படுவதனால் பலன் வரப்போவதில்லை என்ற கருத்துப்பட நோர்வே வெளி நாட்டமைச்சர் கூறியுள்ளார்.

சந்திரிகா அரசாங்கம் உறுதியின்றி, ஆக்கபூர்வமான தீர்வுத்திட்ட மின்றி தடுமாறிக் கொண்டிருக் கிறது. 1995ல் ஆவணியில் பிராந் தியங்களின் ஒன்றியம் எனும் அடிப்படையிலான தீர்வுத்திட் டம் முன்வைக்கப்பட்டது. அத் திட்டமானது ஓரளவேனும் தீர்வு க்கு இட்டுச் செல்லக்கூடியதாக காணப்பட்டதாக அரசியல் விமர் சகர்கள் அபிப்பிராயம் கொண்டி ருந்தனர். ஆனால் சிங்கள பேரின வாத சக்திகளின் அழுத்தங்கள் கார ணமாக அத்திட்டம் மாற்றி யமைக்கப்பட்டு பிரயோசனமற்ற தாக்கப்பட்டது. அதன்பின்பு பாராளுமன்ற தெரிவுக்குழு பல அமர்வுகளை நடத்தி அத்தீர்வுத் திட்டத்தினை ஆராய்ந்தது. இறுதி முடிவு எதுவுமின்றி கலைந்தது.

ஆனால் பா.தெ.கு.முன் தான் சமர் ப்பித்த அரசியலமைப்பு சீர்திருத் தத்திற்கான ஆலோசனைகளைப் பொதுஜன முன்னணி அரசாங்கம் 1997 ஐப்பசியில் பாராளுமன்றத் தில் சமர்ப்பித்தது. சமர்ப்பித்தது மட்டும் தான் அது கிடப்பிலேயே இருந்தது. தற்போது மேற்படி ஆலோசனைகளுக்கும் திருத்தங் கள் செய்யப்பட்ட நிலையிலேயே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப் படுகின்றன.



(தொடர்ச்சி பக்கம் 3)

## ஐ.தே.கவின் வேஷம் கலைகிறது

நோர்வேயின் மத்தியஸ்த முய ற்சி குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.
- டிரோன் பெர்னாண்டோ

எவரையும் சாந்தப்படுத்துவ தற்கு பேச்சுவார்த்தை வேண் டாம். புலிகளை அழிப்பதன் மூலமே சமாதானம் சாத்தியம்
- ஐ.தே.க.எம்.பி.திலக் கருணரத்தினா

ஜனாதிபதி தேர்தல் காலத்தில் பசுத்தோல் போர்த்த புலியாக ஐக்கிய தேசிய கட்சி தமிழ் மக் கள் மத்தியில் வலம் வந்தது. சாதாரண தமிழ் மக்கள் எச்ச ரிக்கையாகவே இருந்தனர். தமது பெயர்களுக்கு பக்கத்தில் சில பட்டங்களை கொழுவிக் கொண்டு திரிபவர்கள் குழப் பினார்கள். ஐ.தே.க.வின் பிர சாரத்தால் புல்லரித்துப் போய், அவர்களுக்கே வாக்களியுங்கள் என்று அறிக்கையும் விட்டார் கள். இப்போது தமக்கும் அந்த தேர்தலுக்கும் தொடர்பில்லா தவர்கள் போல் உலாவுகின்றார் கள்.

(தொடர்ச்சி பக்கம் 3)

## புலிகளுடன் பேச்சுவார்த்தை செய்வோர் துரோகிகள்

### -பயங்கரவாத எதிர்ப்பு இயக்க பிரதிநிதி

''புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்போர் துரோ கிகளே, பிரபாகரனின் குண்டுத் தாக்குதலினால், அவஸ்தைப்பட் டுக் கொண்டிருக்கும் ஜனாதிபதி யும், அமைச்சர் ஜீ.எல்.பீரிஸும் நோர்வே நாட்டுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தப் போகின் றனர். இரண்டு கட்சிகளும், ஒன்று பட்டு சிங்கள இனத்தை தமிழ் பயங்கரவாத புலி இயக்கத் தலை வர் பிரபாகரனிடம் காட்டிக் கொடுக்கப் பார்க்கின்றனர். சமா தான வியாபாரிகள் நாட்டை பிரிக் கச் சதி செய்கின்றனர்.'' இவ்வாறு பயங்கரவாத எதிர்ப்பு இயக்க பிரதி நிதி சம்பிக்க ரணதுங்க கூறினார்.

கண்டி ஸ்ரீ தலதா மாளிகை குண்டு தாக்குதல் சம்பவத்தின் இரண்டு

கடந்த செவ்வாய் அன்று நடைபெற்ற பிக்குமார்களின் ஊர்வலத்தின் பின்னர் கண்டி டி.எஸ்.சென நாயக்கா வாசிகசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கூட்டத் தில் அவர் உரையாற்றினார். அப் பொழுது அவர் கூறியதாவது,

1995ஆம் ஆண்டு அரசு புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியபோது தான், உக்ரேயின் நாட்டிலிருந்து, பௌத்த நாடுகளான பர்மா, தாய் லாந்து, கம்போடியா ஆகிய நாடுக ளின் உதவியுடன் சுமார் 60,000 கிலோ வெடி மருந்துகளை புலிகள் கொண்டு வந்தனர். பௌத்தர்களே பௌத்தர்களின் எதிரிகள் என்ற நிலையில் உள்ள பௌத்த நாடுகள் புலிகளுக்கு ஆயுதம் கிடைக்கச்

இன்று ஆனையிறவு முகாமை 40 நாட்களாக முற்றுகையிட்டு தாக் கும் பிரபாகரனுடன், பேச சுவீ டன், நோர்வே, இங்கிலாந்து நாடு கள் தூண்டுவது இலங்கையைத் துண்டு, துண்டாக பிரிக்க முய லும் மேற்கு நாடுகளின் சதியே, பௌத்த சிங்களவர் ஒன்றுபட்டு செயல்பட வேண்டும் என வலி யுறுத்தினார். நோர்வேயில் தான் இன்று பிரபாகரனின் உலகத்தக வல் தொடர்பு நிலையமே உள் ளது. அந்த நாடு சமாதான பேச் சுக்கு முயல்கிறது. நம் நாட்டிலும் இராணுவம் தோல்வி கண்டால், சிங்கள மக்கள் காட்டிக் கொடுக்கப் படுவார்கள்.




படிப்பகம்

www.padippakam.com





# உலகெல்லாம் அகதி வாழ்வா?

**'புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட போரிடும் உலகை வேரொடு சாய்ப்போம்'**
என்பது பிரபல தமிழ்க் கவிஞர் பாரதிதாசனின் அறைகூவலாகும்.

அவரை ஒத்த பெரும்பான்மையினரைப் போல், மனித உயிருக்கு அன்பும், ஆதரவும், மதிப்பும், கௌரவமும் தரப்படல் வேண்டும். என்ற விருப்பத்தை கவிஞர் தெளிவுறக் கூறியுள்ளார். ஒன்றிணைந்த முயற்சியினால் போரற்ற உலகைப் படைக்கலாம் என்பது கவிஞரின் கனவாக இருந்தது; மனித உயிர், மனித உரிமை, மனித கௌரவம் ஆகியவற்றை வாஞ்சையுடன் போற்றும் எல்லோருடைய கனவும் இதுதான்.

உள்நாட்டுப் போராயினும், புற ஆக்கிரப்பாயினும், ஏகாதிபத்திய விஸ்தரிப்பு யுத்தமாயினும் யுத்தம் தீமையானது துரதிர்ஷ்டவசமான மக்களின் இரத்தம் சிந்தி ஏற்படும் உயிர் இழப்புக்களும், அதனால் ஏற்படும் சொல்லொணாத் துன்பங்களும் கஷ்டமும் இலட்சக் கணக்கான மக்களின் வாழ்க்கையை அர்த்தமற்றதாக்கிவிட்டது. உயிரை நேசிக்கும் களங்கமற்ற மக்களுக்கு ஏற்படும் மனிதத் தன்மையற்ற, அநியாயமான அக்கிரமங்கள், நாகரீகத்தையே வெட்கத்தில் தலை குனிய வைத்துள்ளது.

இலங்கையில் தமிழ் ஈழ மண்ணில் பேரினவாத சிங்கள ஆட்சியாளர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் நடந்து கொண்டிருக்கும் யுத்தத்தின் தாக்கம் ஒரு வகையிலும் வேறுபட்டதல்ல. வன்முறையினால் சிதறுண்டு இடம் பெயர்ந்த பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் வீடுகளை இழந்து அனாதையாகியுள்ளனர்.

பெற்றோரிடமிருந்து பிரிந்த பிள்ளைகள், மனைவிக்கு முன்னாலே கொலை செய்யப்பட்ட கணவன், கணவனுக்கும், பிள்ளைகளுக்கும் முன்னாலே பாலியலுறவுக்கு உட்படுத்தப்பட்ட மனைவி, தங்களது சொந்தம் தங்கள் உடமைகள் என்று ஒன்றையும் பாராட்டமுடியாத பிள்ளைகள், இவர்களில் அடங்குவர்.

இந்தியாவில் வேறுநாட்டு அகதிகள் மனித நேயத்துடன் நடத்தப்பட்டாலும் இலங்கைத் தமிழர்கள் முகாம்களுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கிறார்கள். முகாம்களில் வசிப்பவர்கள் வெளியே போகக் கூடாது. முகாம்களுக்கு வெளியே வசிப்பவர்கள் காவல் படையின் அனுமதியின்றி எங்கும் போகக் கூடாது. விசேஷ முகாம்களில் உள்ளவர்கள் மறியல்காரரைப் போலவே மதிக்கப்படுகிறார்கள். அவர்களுடைய வாழ்வு உண்மையிலேயே ஒரு சிறை வாழ்வு தான்.

தமிழ் நாட்டிலுள்ள அரசியல் சமூகத் தலைவர்கள் இலங்கைத் தமிழர் மேல் பாராமுகமாகவே இருந்து வருகின்றனர். அகதிகளின் கஷ்ட, துன்பங்களைப் பற்றி அவர்கள் அக்கறை காட்டுவதில்லை. குளிர்சாதனை அறைகளில் சொகுசான ஆசனங்களில் இவர்கள் இருந்து கொண்டு 'யுத்தத்திலும் காதலிலும் எல்லாம் ஏற்கப்பட வேண்டியது' என்று முணுமுணுத்துக் கொண்டிருப்பார்கள்.

### முகாம்களில் அகதிகள் எதிர்கொள்ள வேண்டிய பிரச்சினைகள்

அகதிகளுக்காகிய ஐ.நா. ஸ்தானிகராலயத் தின் சட்டப்பிரகாரம் தமிழ் ஈழ அகதிகளுக்கு எவ்வித 'அகதி அந்தஸ்தும்' தமிழ் நாட்டு அரசாங்கத்தாலேயோ அல்லது இந்திய அரசாங்கத்தாலேயோ கொடுபடவில்ல்லை. இதன் காரணமாக அகதிகளுக்கான ஐ.நா. ஸ்தானிகராலயத்திலிருந்தோ அல்லது வேறு அனைத்துலக ஸ்தாபனங்களிலிருந்தோ, தமிழ் ஈழ அகதிகள் எந்த உதவியையும் பெற முடிவதில்லை.

அற்பமான உதவிகளினால் இந்த அகதிகள் ஒரு நாளைக்கு ஒரு நேரமாயினும் வயிறு நிறைய உண்ண முடியாது என்பது கண்கூடு. ஏனென்றால் அகதிகள் முகாம்களுக்கு வெளியே வேலை செய்வதும் அனுமதிக்கப்படுவதில்லை.

### காவல்படைத் தொல்லை

உள்ளூர் காவல்படை முகாம் காவல் ஐபி படை மற்றும் உத்தியோகத்தர்கள் பயமுறுத்திக் கேட்கும் லஞ்சங்களுக்கு ஓர் எல்லை இல்லை. அதை எதிர்ப்பவர்கள் புலிகள் எனப் பட்டம் சூட்டப்படுவர். அங்கு இருப்பவர்களே கட்டாயப்படுத்தப்படுவர். இளம் பெண்களும் ஆண்களும் வன்முறை பாலியல் உறவுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும். இதை எதிர்ப்பவர்கள் எந்தவித விசாரணையுமின்றி விசேஷ முகாம்களுக்கு மாற்றப்படுவர். வேலூர் முகாமில் ஒரு காவல் படையினனின் பாலியல் நோக்கத்துக்கு இணங்காத ஒரு பெண் போதை வஸ்து குற்றப்பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டார். இதேபோன்ற ஒரு சம்பவத்தில் மணப்பாறையில் காவல்படையைக் கண்டித்த திரு கந்தையா (85 வயது) என்பவர் தமிழ்ப் புலி என நாமம் சூட்டப்பட்டு விசேஷ முகாமுக்கு மாற்றப்பட்டார்.

முகாம்களில் பசியும் பட்டினியும் எந்த நாளும் காணக்கூடியதாயுள்ளது. கர்ப்பிணிப் பெண்களுக்கு மருத்துவ உதவி கிடைப்பதில்லை. குழந்தைகளுக்கு போஷாக்கான உணவோ, பாலோ கிடைப்பதில்லை. வேதனையினால் சலிப்படைந்து சிலர் தற்கொலை செய்வதற்கும் முயற்சிக்கிறார்கள். சிலர் சமூக விரோதச் செயல்களிலும் ஈடுபடுகிறார்கள்.

அகதிப் பிள்ளைகளின் கல்விக்கு சாவுமணி அடிக்கப்பட்டு விட்டது. இலங்கைத் தமிழ் அகதிப் பிள்ளைகளின் கல்விக்கு முந்தி அரசு விதித்திருந்த தடையை தி.மு.க. அரசு பதவிக்கு வந்தவுடன் நீக்கியது உண்மையே. தமிழ் நாட்டிலுள்ள கல்வி தனியார் மயமாக்கப்பட்டபின், உயர்கல்வி நிறுவனங்களில் இடம் பெறுவதற்கு பல ஆயிரம், இலட்சம் ரூபாய்களைத் தானம் செய்வதற்கோ, இலஞ்சமாகக் கொடுப்பதற்கோ அகதிகளுக்கு எந்த வசதியுமில்லை.

### முகாம்களுக்கு வெளியேயுள்ள வாழ்க்கை

ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட இலங்கைத் தமிழர் முகாம்களுக்கு வெளியே வாடகை வீடுகளில் வசிக்கிறார்கள். இவர்கள் காவல் நிலையங்களில் பதிவு செய்துள்ளனர். 5000க்கு மேற்பட்ட குடும்பங்கள் காவல் நிலையங்களில் பதிவு செய்யாமலே தமிழ் நாட்டில் வசிக்கிறார்கள். இந்திய இராணுவம், இலங்கையிலிருந்து திரும்பியபோது அவர்களுடன் இந்திய விசுவாசி வரதராஜப் பெருமாளும் ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர்களும் கூடவே வந்தனர். இவர்களுடன் கூட எத்தனையோ போராளிகளும் குடும்பங்களும் வந்து ஒரிசாவிலும், கர்நாடகத்திலும் குடியேறினர்.

### தமிழ் நாட்டில் தமிழருக்கு அநீதி

இரண்டு கண்ணும் தெரியாதவர்கள் இரு காலிலும் நிற்கமாட்டாதவர்கள் அவயங்களை இழந்தவர்கள் போன்ற ஊனமுற்றவர்களை அதுவும் எந்தக் குற்றமும் செய்யாதவர்களை சிறப்பு முகாம்களில் வைத்திருக்கிறார்கள் என்பதை நம்புவது கடினம்.

(தொடர்ச்சி பக்கம் 9)

## மலையகத்தில் வெற்று தமிழ் கிராம சேவகர்கள்

நுவரெலியா, பதுளை மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள, 101 தமிழ் கிராம சேவகர்களும், முறையாக அதிகாரங்கள் எதுவும் வழங்கப்படாத நிலை இருப்பதாக தெரியவருகிறது. இவர்களுக்கு விடுதி வசதிகளோ, காரியாலய வசதிகளோ இதுவரை செய்து கொடுக்கப்படவில்லை. கிராம சேவகர்களுக்குரிய அடையாள அட்டை, கிராம சேவகர் முத்திரை என்பனவும் இதுவரை வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கின்றனர். தமிழ் மொழியில், கருமங்கள் செய்தால், அதை ஏற்றுக் கொள்வதில்லை என்றும், சிங்கள மொழி மூலம் எழுதினால் தான் அலுவல்கள் நடைபெறுவதாகவும் கூறப்படுகின்றது. தோட்டப் பகுதிகளில் அடையாள அட்டைகளே வழங்கும் அதிகாரங்கள் இதுவரை தமிழ் கிராமசேவகர்களுக்கு வழங்கவில்லை எனவும் தெரியவருகிறது. தோட்டப்பகுதியில் அடையாள அட்டை வழங்கும் விடயங்களை தோட்ட நிர்வாகமே மேற்கொள்வதாக தெரியவருகிறது.

பெரும்பான்மை இன கிராம சேவர்களுக்கு இருக்கும் அதிகாரம் தமிழ் கிராம சேவகர்களுக்கு இல்லை என்பதே உண்மை.

## பெருந்தோட்ட காணிகளில் பெரும்பான்மையினத்தோர் அத்துமீறி குடியேற்றம்

மாத்தளை பகுதியில் உள்ள எக்கலை தொகுதியில், உள்ள ஒம்பலகலை, குறூப் ஆகலை பிரிவில் 300 மேற்பட்ட தமிழ் குடும்பங்கள் உள்ளன. மேற்படி தோட்டம் தற்போது மூடப்பட்டுள்ளது. தோட்டத்துக்கு, சொந்தமான காணிகளில் அயல் கிராமங்களில் உள்ள சிங்கள மக்கள் அத்துமீறி குடியேறி வருகின்றனர்.

இது சம்பந்தமாக அரசாங்கத்துக்கு முறையீடு செய்தும் எதுவித பலனும் கிடைக்கவில்லை. தோட்டமக்கள், தமது வேலையை இழந்திருப்பதுடன், இன்று குடியிருப்புகளையும், இழக்கும் அபாயம் தோன்றியுள்ளது.

ஏற்கனவே அரசாங்கம் இப்பகுதியில் காணி வழங்கும் போது, தோட்டமக்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும் என்று கூறிவந்தது. ஆனால் இன்று தோட்டமக்களை அங்கிருந்து விரட்டும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இக் காணிகளில் குடியேறிய பெரும்பான்மையினர், தாம் குடியிருப்பதுடன், மேலதிகமாக காணிகளை விற்பனை செய்தும் வருகின்றனர்.

மலையகமக்களுக்கு இன்று பல்வேறுபட்ட சோகங்கள், துயரங்கள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. ஆனால், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், அவசரகாலச் சட்டத்துக்கு தொடர்ந்தும் தமது கைகளை உயர்த்திய வண்ணம் உள்ளனர். இவர்களுக்கு கைகள் வலிக்குதோ என்னவோ, தெரியவில்லை ஆனால் மலையக மக்களுக்கு இல்லாது போகும் நிலை உருவாகியுள்ளது.

## மட்டு.பிரயண பாஸ் வழங்கலை நடைமுறைப்படுத்த துரித ஏற்பாடுகள். பொலிஸ் அதிகாரிகளுக்கு விசேட பயிற்சிகள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரயாண அனுமதிப்பத்திரம் மற்றும் நிரந்தர வதிவாளர்களுக்கான அனுமதிப்பத்திரம் என்பவற்றை வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள பொலிஸார் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். பாஸ் வழங்கும் நடைமுறை மற்றும் தகவல்களை கணனிப்படுத்தல் தொடர்பான கடமைகளுக்காக தெரிவு செய்யப்பட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சர் தரத்தினரான அதிகாரிகள் சிலர் விசேட பயிற்சியை பெறுவதற்கு கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

அரசடியிலுள்ள மட்டக்களப்பு மாநகரசபை பொதுநூலக கட்டிடத்தில் பாஸ் வழங்கும் அலுவலகம் இயங்கவுள்ளது. 199ஆம் ஆண்டு ஜூலை முதல் இக்கட்டிடத்தில் இயங்கும் பொலிஸ் காவல் நிலையம் இதற்கு வசதியாக வேறிடத்திற்க இடமாற்றப்படவுள்ளது.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் காரியாலயத்தில் இந்த நடைமுறைகளை மேற்கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்களை அச்சிடும் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்கு முன்னர் பிரயாண அனுமதிப்பத்திரம் வழங்குவதை அமுலாக்குவதற்குரிய நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டிருப்பதாக தகவலறிந்த வட்டாரத்தினர் தெரிவிக்கின்றனர். இது தொடர்பான உத்தியோகபூர்வ வர்த்தமானி பிரகடனத்தை அரசு வெளியிட்ட பின்பே வழங்கும் பணிகள் ஆரம்பமாகும்.

புதிய சமதர்மம் பத்திரிகையில் தமது ஆக்கங்களை (கட்டுரை, சிறுகதை, கவிதை) வெளியிட விரும்புவோர் கீழ்க்காணும் முகவரிக்கு ஆக்கங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஆசிரியர்,
புதிய சமதர்மம்,
143/3, கியூ வீதி, கொழும்பு - 2.

www.padippakam.com



# வாடகைக் கொள்ளை

மனிதனை மனிதன் சுரண்டும் நிகழ்வுகள் உலகிலே அமைதி இன்மைக்கு மூல காரணமாக உள்ளது. வர்க்க முரண்பாடு இருக்கும் வரை உலகில் அமைதி பற்றி பேசுவது நகைப்புக்குரியதாகும். வாடகை என்பது இன்று ஒரு பகல் கொள்ளையாக மாறிவிட்டது. யுத்தம் என்னும் கொடிய அரக்கனின் செயற்பாடு இக் கொள்ளைக்கு பேருதவியாக இருக்கிறது. இனவாதமும் இக் கொள்ளைக்கு குளுக்கோஸ் கொடுப்பது போல் ஆங்காங்கே உதவியாக இருக்கிறது.

கொழும்பு மாநகரம் இக் கொள்ளைக்கு பெயர் போன இடமாக மாறிவிட்டது. வடக்கு, கிழக்கு மக்களே பெருமளவில் வாடகைக்கு பலியாகின்றார்கள். ஒரு அறையை வாடகைக்கு எடுப்பதற்கு 5 ஆயிரம் ரூபாய் வாடகை கொடுக்க வேண்டிய நிலை இங்கு உள்ளது. ஒரு தமிழ் குடும்பபம் கொழும்பில் வாடகைக்கு வீடு எடுக்க வேண்டுமாயின், இரண்டு வருட முற்பணம், கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளனர். இவற்றுடன் மின்சாரம், தண்ணீர், தொலைபேசி உபயோகம் என்பவற்றிற்கு மேலதிகமாக கட்டணம் செலுத்த வேண்டிய கட்டாயமும் அவர்களுக்கு உண்டு. வாடகை, முற்பணம், ஏனைய கட்டணங்கள் என்பதற்கு ஒரு வரைமுறை கிடையாது. வீட்டு உரிமையாளர் வைப்பதே சட்டமாகும்.

புலிவேட்டையில் இறங்கி இருக்கும், அரசாங்கம் இந்த கொள்ளை விடயத்தில் எதுவித தலையீடும் செய்வதில்லை. சில இடங்களில் தமிழ் குடும்பங்களை வாடகைக்கு அமர்த்தி விட்டு, வாடகைக் காலம் முடியும் முன்னரே விரட்டி விடுவதும் வழமையாகிவிட்டது. இங்ஙனம் விரட்டப்படும் போது, முற்பணம் எதுவும் திருப்பி கொடுப்பதும் இல்லை. தமிழ் மக்களின் பூர்வீகத்தை விலாவாரியாக விசாரணை செய்யும் பாதுகாப்பு பிரிவினர் வாடகை சம்பந்தமான பிரச்சினைகளில் அதிகம் அக்கறை காட்டுவதில்லை. பாதுகாப்பு காரணங்களுக்காக தினம் தினம் புதிய சட்டங்களை உருவாக்குபவர்கள் வாடகை சம்பந்தமாக அறிக்கைகளை கூட வெளியிடுவதில்லை.

வடக்கு கிழக்கு மக்கள், பெருமளவில் கொழும்பில் தஞ்சம் அடைந்ததில் கொழும்பில் வாடகைக்கு குடியிருந்த ஏழை மக்களின் நிலை மிகப் பெரும் திண்டாட்டத்துக்கு உள்ளாகியுள்ளது. இவர்கள் கொழும்பு நகரை விட்டு வெளியேறும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். வேறு பலர் மனித இனம் வாழ முடியாத வெட்டை வெளிகளில் மனிதத் தூசுகளாக வாழ்கின்றனர்.

இங்ஙனம் வாழ்கின்றவர்களின் நிலையும் மிகமோசமான கட்டத்தை அடைந்துள்ளது. கொழும்பு மாநகரில் 1500 மேற்பட்ட சேரிகள் உள்ளதாக தெரியவருகிறது. இவற்றில் 66,000 குடும்பங்கள் சீவிக்கின்றன. கொழும்பு நகரை உல்லாச புரியாக்கும் திட்டத்தின் கீழ் சேரி மக்களை கொழும்புக்கு வெளியே விரட்டுவதற்கு திட்டங்கள் தயாராக உள்ளன. இவற்றிலும் தமிழ் குடும்பங்கள் அதிகமாக வாழும் சேரிகளுக்கு தண்டனை கொஞ்சம் கூடவாகவும் இருக்கிறது.

கொழும்பு நகரில் வாடகைக்கு குடியிருக்கும் தமிழ் மக்களிடம் வீட்டு உரிமையாளர் வாடகை என்ற பெயரில் அடிக்கும் கொள்ளையை விட வேறும் தப்படுகிறது. போதைவஸ்து உபயோகிப்பவர்கள் இன்று கொழும்பு நகரில் மலிந்து காணப்படுகின்றனர். இவர்களை ''குடுக்காரர்'' என்ற பெயரில் அழைக்கின்றார்கள். இந்த குடுக்காரர் தமது போதைவஸ்து தேவைக்காக வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் வீடுகளையே குறியாக வைத்து களவு கொள்ளைகளில் ஈடுபடுகின்றனர். இதைவிட இராணுவத்தில் இருந்து வெளியேறியோர் தமது அடையாள அட்டைகளை காண்பித்து தமிழ் மக்களின் வீடுகளில் தமது கைவரிசையை காட்டுகின்றனர். புலன் விசாரணை செய்ய வந்துள்ளோம் என்று கூறியே இவர்கள் கொள்ளையில் ஈடுபடுகின்றனர்.

> இராணுவத்தில் இருந்து வெளியேறியோர் தமது அடையாள அட்டைகளை காண்பித்து தமிழ் மக்களின் வீடுகளில் தமது கைவரிசை காட்டுகின்றனர். புலன் விசாரணை செய்ய வந்துள்ளோம் என்று கூறியே இவர்கள் கொள்ளையில் ஈடுபடுகின்றனர்.

பாரம்பரியமாக கொலை, களவு தொழிலைச் செய்பவர்களும், பெரும்பாலும் தமிழ் மக்களின் வீடுகளிலேயே தமது செயற்பாடுகளை செய்கின்றனர். தெரு ஒழுங்கை, வீடு என்ற எல்லா இடங்களிலும் தமிழ் மக்கள் கொள்ளையிடப்படுகின்றார்கள்.

இவை பற்றி பொலிஸ் நிலையங்களில் புகார் கொடுத்தால் புகாரை எடுப்பதற்கே பொலிசார் பெரும் சிரமப்படுகின்றார்கள். அங்ஙனம் புகாரை பொலிசார் ஏற்றுக் கொண்டாலும் சம்பந்தப்பட்ட இடங்களுக்கு சென்று விசாரணை செய்வது அனேகமாக இல்லை என்றே கூற வேண்டும்.

வீடுகளில் வாடகைக்கு இருக்க முடியாத பல வடகிழக்கு தமிழ் குடும்பங்கள் இன்று பல ''லொட்ஜ்''களில் பல வருடங்களாக வாழ்ந்து வருகின்றன. இங்ஙனம் ''லொட்ஜ்''களில் இருக்கும் போது, ''லொட்ஜ்'' முதலாளிமார் பெருமளவு பணத்தை இவர்களிடம் இருந்து கறந்து விடுகின்றார்கள். இதைவிட இந்த தனியார் ''லொட்ஜ்'' களில் தங்கியிருப்பவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றார்கள்.

வடக்கு, கிழக்கு மக்களை நம்பி இன்று திடீர், திடீர் என்று பல புதிய வீடுகள் உருவாகின்றன. இவற்றின் சுகாதார வசதிகள் பற்றி யாரும் அக்கறை எடுத்ததாக தெரியவில்லை.

ஆப்கானிஸ்தானில் உள்நாட்டு யுத்தம் நடைபெற்ற போது பல லட்சம் ஆப்கானிஸ்தானிய மக்கள் பாகிஸ்தானில் அகதிகளாக தஞ்சம் அடைந்தனர். இவர்களின் ஏழ்மை நிலையை தமக்கு சாதகமாக பயன்படுத்தியது பாகிஸ்தானிய செல்வந்த வகுப்பு. பாகிஸ்தானில் பெசவார் என்ற நகரில் பெருமளவு ஆப்கானிஸ்தானியர் குடியேறினர். பெசவார் நகரம் பெரிய நகரமாக அப்போது இருக்கவில்லை. ஆப்கானிஸ்தான் அகதிகள் வருகையால் பெசவாரில் இருந்த செல்வந்த பாகிஸ்தான் பிரசைகள், இவ் அகதிகளுக்கு வீடுகளை கொடுத்து வாடகை வாங்கியதுடன் மிகக் குறைந்த சம்பளத்துடன், இம்மக்களை கூலிகளாக பயன்படுத்தி தமது விவசாய நிலங்களை மிக மலிவான சம்பளத்துடன் அபிவிருத்தி செய்தனர். மிக குறுகிய காலத்தில் பெரும் செல்வந்தர்களும் ஆயினர்.

ஆப்கானிஸ்தான் யுத்தம் முடிவுக்கு வந்து அகதிகள் திரும்பவும் ஆப்கானிஸ்தானுக்கு சென்றபோது பெசவார் நகரம் மனித நடமாட்டம் இல்லாத பேய் நகராக மாறியது. இன்று வடக்கு கிழக்கு மக்களுக்கு வீடுகளை கொடுத்து கொள்ளையடிக்கும் கூட்டம் இம் மக்கள் தமது சொந்த மண்ணுக்கு திரும்பும் போது, வயிற்றில் ஈரத்துணி கட்டி சீவிக்க வேண்டிய நிலையும் ஏற்படலாம்.

இலங்கையில் வேலையற்றோர் தொகை அதிகமாக இருந்த காலங்களில் கிளர்ச்சிகள், புரட்சிகள், என்பன நடந்தேறின. ஆனால் இராணுவத் துறையில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டதால் வேலையில்லாத் திண்டாட்டம் குறைக்கப்பட்டுள்ளது. அதேபோல் கொழும்பு நகரில் பொருளாதார பிரச்சினையை வடக்கு கிழக்கு மக்களை சுரண்டுவதன் மூலம் பரிகாரம் காண முயற்சிக்கின்றதா என்ற எண்ணமே மக்கள் மனதில் இன்று தொங்கி நிற்கிறது.

> கொழும்பு மாநகரம் வாடகைக் கொள்ளைக்கு பெயர் போன இடமாக மாறிவிட்டது. வடக்கு, கிழக்கு மக்களே பெருமளவில் இதற்குப் பலியாகின்றார்கள். ஒரு அறையை வாடகைக்கு எடுப்பதற்கு 5 ஆயிரம் ரூபாய் வாடகை கொடுக்க வேண்டிய நிலையும் இங்கு உள்ளது.

1970ல் பீட்டர் கெனமன் வீடமைப்பு அமைச்சராக இருந்த போது கட்டிய வீடுகளையும், ஏழைகளுக்கு வழங்கிய வீடுகளையும் மனசாட்சி உள்ள எந்த மனிதனும் மறுக்க மாட்டான், இன்று பொது ஜன முன்னணியில் ஒட்டி இருக்கும் இடதுசாரிகளுக்கு அவசரகாலச் சட்டத்துக்காகக் கை உயர்த்துவதிலேயே அவர்களது பதவிக்காலம் கழிகின்றது.

முதலாம் பக்கத் தொடர்ச்சி...

## சந்திரிகாவை...

முதலில் அரசாங்க கட்சிகளுக்கிடையில் கலந்துரையாடி அடுத்து தமிழ் கட்சிகளும் கலந்துரையாடி பின்பு ஐக்கிய தேசியக் கட்சியுடன் கலந்துரையாடி இறுதியாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடுவதாகவே ஆரம்பத்தில் அரசதரப்பில் தீர்மானிக்கப்பட்டது. இந்த வரிசையில் தமிழ்க் கட்சிகளுடன் கலந்துரையாடும் கட்டத்துக்கு வந்து விட்டதாக காண்பிக்கப்பட்டது. ஆனால் அரசாங்க கட்சிகளுக்கிடையிலேயே கருத்தொருமிப்பு எட்டப்படவில்லை. தமிழ் கட்சிகளுடனும் வடக்கு கிழக்கு இணைப்பு போன்ற அடிப்படை விடயங்கள் மீது இணக்கம் காணப்படவில்லை. இந்த நிலையில் தான் ஜனாதிபதி சந்திரிகா ஐ.தே.க.வுக்கு அழைப்பு விடுத்திருந்தார். ஐ.தே.க.வுக்கு விடுத்த அழைப்பில் அம்மையார் 1995 ஆவணியில் அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட யோசனைகளே பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என அறிவித்திருந்தார். ஆனால் உண்மையில் இப்போது கலந்துரையாடலுக்கு அரசாங்கத்தின் பிந்திய திருத்தங்களுடன் கூடிய '1997 ஐப்பசியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசியலமைப்பு சீர்திருத்தத்திற்கான ஆலோசனைகளே முன்வைக்கப்பட்டுள்ளன. எனவே இவ்விடயம் தொடர்பாக அரசதரப்பில் எவ்வளவு ஆழமான குளறுபடிகள் அல்லது தில்லுமுல்லுகள் இருக்கின்றன என்பதையே காட்டுகிறது. சந்திரிகா அம்மையார் ஒரு சுழியில் அகப்பட்டவர் போல் தத்தளிக்கும் நிலைமை தான் உருவாகியுள்ளது. 1994ல் பொதுஜன முன்னணி பதவிக்கு வந்ததும், தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பாக ஒரு அரசியல் நிர்ணய சபையினை உருவாக்க வேண்டுமென சில அரசியல் விமர்சகர்கள் கருத்து தெரிவித்திருந்தனர். அரசாங்கம் அதனை உதாசீனம் செய்துவிட்டது. ஜனாதிபதி மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ள இன்றைய நிலையிலும், கூட ஒரு அரசியல் நிர்ணய சபையினை அமைத்து அரசாங்கம் 1995 ஆவணியில் முன்வைத்த ஆலோசனைகளைப் பரிசீலனைக்கு உட்படுத்தி முன்னேறுவது ஒரு ஆக்கபூர்வமான நடவடிக்கையாக அமையலாம்.

முதலாம் பக்கத் தொடர்ச்சி...

## ஐ.தே.கவின்...

இப்போது கூட ஒரு தேர்தல் வந்தாலும் அவர்கள் ஐ.தே.க. பக்கமே நிற்பார்கள். இது இனத்துவம் கடந்த வர்க்க ஒற்றுமையாகும்.

இனப்பிரச்சினை தீர்வில் ஐ.தே.க. வடக்கு கிழக்கு இணைப்பை ஏற்கவில்லை. பிராந்திய ஆட்சி முறையையும் ஏற்கவில்லை. ஒற்றை ஆட்சி முறையிலேயே கருத்தாக உள்ளது. இதே நிலைப்பாடு தான் பொதுஜன முன்னணியில் இருக்கும் இனவாதிகளினதும் ஆகும்.

இந்த நாட்டை 17 வருட காலம் ஆட்சி செய்த ஐ.தே.க. செய்த மிகப் பெரிய சேவை, தமிழ் மக்களுக்கு எதிராக இனக்கலவரங்களை தூண்டிவிட்டமையேயாகும். இலங்கைக்குள் இந்தியப் படையை வரவழைத்து அவர்கள் மூலம் எம் மக்களை கொன்று குவித்தவர்களும் இவர்கள் தான்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தை உருவாக்கிய ஜே.ஆர். தன்னை சந்திக்க வந்த பௌத்த துறவிகள் தூதுக் குழுவிற்கு தெரிவித்த கருத்து என்னவென்றால் இந்த மாகாண சபைக்கு ஒரு கிராம சபைக்கு இருக்கிற அதிகாரம் கூட இல்லை. எனக் கூறியிருந்தார். உண்மையில் அதுவே உண்மையாகவும் உள்ளது.

ஜே.ஆர். தனது குள்ளத்தனத்தால் அரசியலமைப்பை சிக்கலாக்கினார். இனப்பிரச்சினையை சிக்கலாக்கினார். தென் இலங்கை வாலிபர்களை சிக்கலுக்குள் தள்ளினார். இறுதியில் நாட்டையே நடுக்கடலில் விட்டார்.

இன்று அவரது வாரிசுகள், வேசமிட்டு திரிகின்றார்கள். இனப்பிரச்சினை தீர்வில் தாம் ஏதோ தமிழ் மக்களுக்கு இரட்சகர்களாக உள்ளதாக காட்டிக் கொண்டு மறுபக்கத்தில் தமிழ் மக்களின் தீர்வுக்கு தடைக்கல்லாகவும் இருக்கின்றனர்.

படிப்பகம்

www.padippakam.com



# பண்டாரநாயக்க முதல் சந்திரிகா வரை

## - ஒரு மீள்பார்வை சுருக்கம்

இலங்கை சுதந்திரம் பெற்ற பின் 1959 லேயே அரசியல் கொலை எனும் அசிங்கம் தலைதூக்கியது. அன்றைய பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவே அதற்குப் பலியானவர். அவர் ஏன் கொலை செய்யப்பட்டார்? தனிச்சிங்கள சட்டத்தினை நிறைவேற்றியதற்காக யாராவது தமிழரால் கொலை செய்யப்பட்டாரா? அல்லது அவர் பண்டாரநாயக்க செல்வநாயகம் ஒப்பந்தத்தினை ஒரு தலைப்பட்சமாக கிழித்தெறிந்ததற்காக யாராவது தமிழரால் கொலை செய்யப்பட்டாரா? இல்லை என்பது எவரும் அறிந்ததாகும். பதவி ஆசை கொண்டு சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு அவர் அடிபணியும் நிலைக்குத் தன்னை காலப்போக்கில் இட்டுச் சென்றதன் காரணத்தாலேயே அவர் கொலை செய்யப்பட்டார். அதாவது, முதன் முதலாக அவர் தமிழ் தேசிய இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறைதான் உகந்ததென ஆரம்ப காலத்தில் கொண்டிருந்த நிலைப்பாட்டினை துறந்தார். இரண்டாவதாக, 1951 ல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆரம்பித்த போது வரைந்த முதலாவது விஞ்ஞாபனத்தில் சிங்களமும் தமிழும் இந்த நாட்டின் அரசகரும மொழிகளாக இருத்தல் வேண்டும் என தீட்டிய திட்டந்தை காற்றில் பறக்க விட்டதுடன், ''24 மணித்தியாலத்தில் தனிச்சிங்களம்'' அரசகரும மொழியாக்கப்படும் என 1955 ல் வேடம் பூண்டார். இவ்வாறாக ஏன் அவர் தடம்புரண்டார்?



இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க, தனக்கு அடுத்தவராயிருந்த பண்டாரநாயக்கவை ஓரங்கட்டி, தனது மகன் டட்லிக்கு தனக்குப் பின் பிரதமர் பதவியை வழங்குவதற்கு அன்றைய தேசாதிபதி சோல்பரி பிரபுவுடன் சூழ்ச்சி செய்தமை பண்டாரநாயக்காவின் குத்துக்கரணத்துக்கு ஒரு வெளித்தோற்றமான காரணம் எனலாம். ''டி.எஸ்.சேனநாயக்க தனது மகன்மீது கொண்டிருந்த பாசத்தினைக் காட்டிலும் நாட்டின் மீது பற்றுக்கொண்டவராயிருந்தால் இந்த நாட்டின் வரலாறே வேறு விதமாக அமைந்திருக்கக் கூடும்'' என சீ.சுந்தரலிங்கம் பின்பு எழுதிய கட்டுரைத் தொகுதியில் குறிப்பிட்டிருந்தார். பிரதமர் பதவியை எட்டுவதற்கு பண்டாரநாயக்க தனக்கே உரிய வழியைக் கையாள முற்பட்டார். ஆயினும் 1956ல் பதவிக்கு வந்த அவர், 1957ல் செய்து கொண்ட பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தத்தினை சிங்கள பேரினவாத சக்திகளின் விருப்பத்திற்கேற்ப ஒருதலைப்பட்சமாக கிழித்தெறிந்தும் கூட, அதே சக்திகளோ அவரின் உயிருக்கு உலைவைத்தது வரலாறு.

### 1958 இனக்கலவரம் - பிரிவினைக்கான சமிக்ஞையா என எழுந்த கேள்வி

1958ல் தமிழ் மக்களுக்கெதிராக கொழும்பிலும் தென்னிலங்கையின் ஏனைய பகுதிகளிலும் கட்டவிழ்த்து விடப்பட்ட இனக்கலவரம் காரணமாக தமிழ் மக்களுக்கு வரலாறு காணாத உயிர், உடைமை இழப்புகள் ஏற்பட்டன. அந்த சோக நிகழ்வினை சித்திரித்து ''அவசரகாலம் 58'' என மகுடமிட்டு அன்றைய பிரபல பத்திரிகையாளர் ரார்சி வித்தாச்சி எழுதிய புத்தகத்தில் ''அது மனிதனுக்கு மனிதனால் இழைக்கப்பட்ட கோரத்தாண்டவம்'' என வர்ணித்திருந்தார். சிங்களவரும் தமிழரும் பிரிந்து செல்வதற்கான சமிக்ஞையாக அக்கலவரம் அமைந்து விடுமா என்ற கேள்வியையும் வித்தாச்சி எழுப்பியிருந்தார். அன்று இடம் பெற்ற அனர்த்தங்களில் ஒரு தமிழ் கர்ப்பிணிப் பெண் கொழும்பு வீதியில் வயிறு பிழந்து கொலை செய்யப்பட்டதும், பாணந்துறை கோவிலுக்குள் ஒரு பூசகர் தீயிட்டுக் கொல்லப்பட்டதும் கறைபடிந்த இரு சம்பவங்களாகும்.

### தமிழ் மக்களின் போராட்டங்கள் 1960 களில் இராணுவ நசுக்குதலுக்கு ஆளாக்கப்படல்

பண்டாரநாயக்க கொலை செய்யப்பட்ட பின் அவரின் மனைவி சிறிமாவோ தலைமையில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தொடர்ந்து ஆட்சி நடத்தியது. தமிழ் மக்களுக்கெதிரான புறக்கணிப்புக் கொள்கைகள் தொடர்ந்தன. அவற்றை எதிர்த்து தமிழரசுக் கட்சி தலைமையில் போராட்டங்கள் தொடரப்பட்டன. அக்கட்சியினால் 1961ல் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட சத்தியாக்கிரக போராட்டம் சிறிமாவோ அரசாங்கத்தினால் தென்னிலங்கையில் இருந்து ஏவப்பட்ட இராணுவத்தினரை கொண்டு முறியடிக்கப்பட்டது. தமிழ் இனவிடுதலை போராட்டத்தை நசுக்குவதற்கு அரச பயங்கரவாதம் அன்றுதான் ஆரம்பமாகியது.

### டட்லி - செல்வா ஒப்பந்தம் கிழிப்பு

பின்பு டட்லி சேனாநாயக்கா தலைமையில் 1965ல் பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தினால் தமிழ்மொழி மட்டுப்படுத்தப்பட்ட முறையிலாயினும் உபயோகித்தக்க வகையில் தமிழ் மொழி (விசேட சரத்துக்கள்) சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதனைக்கூட ஸ்ரீ.ல.சு.க. - ல.ச.ச.க. ஸ்ரீ.ல.க.க. கூட்டணியானது வன்மையாக எதிர்த்ததுடன் ''டட்லி கே படே மசாள வடே'' என்று தமிழ் மக்களை அவமதிக்கும் வகையிலான சுலோகத்தினையும் கையாண்டது. பின்பு மாவட்ட சபைகள் அமைப்பதற்கு வகை செய்யுமுகமாக டட்லி சேனாநாயக்க செல்வநாயகத்துடன் ஒரு ஒப்பந்தத்தினை செய்து கொண்டார். அவ் ஒப்பந்தமும் பின்பு டட்லி சேனாநாயக்காவினால் ஒருதலைபட்சமாக கிழித்தெறியப்பட்டது.

### 1970 கூட்டரசாங்கமும் தமிழர் விரோத செயற்பாடுகளும்

1970ல் ஸ்ரீ.ல.சு.க. - ல.ச.ச.க. ஸ்ரீ.ல.க.க. கூட்டணி அரசாங்கம் பதவியேற்றது. அவ் அரசாங்கம் தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழக கல்வியை பெறுவதை மட்டுப்படுத்தும் விதத்தில் மொழிமூலமான தரப்படுத்தல் நடைமுறையினை தனது ஆரம்ப நடவடிக்கைகளில் ஒன்றாக மேற்கொண்டது.

எனவே ஒட்டுமொத்தமான விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் ஆயுதம் தாங்கி போராடுவதற்கு வித்திட்ட உடனடி காரணிகளில் அதுவும் ஒன்றாகும். எனவேதான் ஐ.தே.க, ஸ்ரீ.ல.சு.க. மற்றும் பழைய இடதுசாரி கட்சிகள் யாவும் தமிழ் தேசிய இனவிடுதலை போராட்டம் ஆயுதப் போராட்டமாக பரிணமிப்பதற்கு கூட்டாக பங்களித்துள்ளனர் என்பது நன்கு புலனாகும்.

### 1977ல் ஜே.ஆர்.தலைமையில் ''தர்மிஸ்ட'' அரசாங்கம் தமிழ் மக்கள் மீது அட்டகாசம்

1977ல் ஜே.ஆர்.ஜயவர்த்தனா தலைமையிலான ஐ.தே.க. அரசாங்கம் பொருளாதார சுபீட்சத்தையும் ஒரு ''தர்மிஸ்ட'' சமுதாயத்தையும் கட்டியெழுப்ப போவதாக 'கவர்ச்சியான பல வாக்குறுதிகளை



அளித்து பதவிக்கு வந்தது. அத்தோடு மொழி, கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் காணி பிரயோகம்/ குடியேற்றத்திட்டம் போன்ற துறைகளில் தமிழ் மக்கள் கொண்டிருந்த உண்மையான மனக்குறைகளை தீர்க்கப் போவதாகவும் அன்று வாக்குறுதி வழங்கப்பட்டது. ஆனால் பதவிக்கு வந்ததும் தமிழ் தேசிய இனப்பிரச்சினையை பொறுத்தவரையில் ஜே.ஆர். ஆத்திரம் கொண்ட போக்கினை கடைப்பிடித்து வாக்குறுதியை காற்றினில் பறக்கவிடத் தவறவில்லை. அதுமட்டுமல்லாமல் தமிழ் மக்களுக்கு எதிரான இரண்டாவது பெரிய இனக்கலவரம் ஒரு சில மாதங்களுக்குள் கட்டவிழ்த்து விடப்பட்டது. தமிழ் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுமுகமாக ஒரு சர்வகட்சி மாநாடு கூட்டப்படும் என வழங்கப்பட்டிருந்த வாக்குறுதி கைவிடப்பட்டது. ஜே.ஆர். தனக்கு விரும்பியவாறான அரசியலமைப்பொன்றினை உருவாக்கினார். அதில் தமிழ் மொழிக்கு ''தேசிய மொழி'' எனும் அந்தஸ்து வழங்கப்பட்டிருந்தது. அத்தோடு இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு விட்டது என்று ஜே.ஆர். தானே திருப்திப்பட்டுக் கொண்டார். 1977ல் இடம் பெற்ற இனக்கலவரம் 1958ல் இடம் பெற்ற கலவரத்தை காட்டிலும் படுமோசமானதாக இருந்தது என்பதை இங்கே குறிப்பிட வேண்டும். 1979ல் ஜே.ஆர். பயங்கரவாத தடைச்சட்டம் எனும் படுபயங்கரமான சட்டமொன்றினை உருவாக்கினார். அது 1867ல் இங்கிலாந்தில் இயற்றப்பட்ட பயங்கரவாத தடுப்பு சட்டத்திற்கு ஒப்பானதாகும். மேற்படி சட்டத்தினை நிறைவேற்றியதும் ஜே.ஆர்.பயங்கரவாதத்தையும் அதன் அனைத்து வெளிப்பாடுகளையும் ஆறு மாதத்துக்குள் முடித்து கட்ட வேண்டும்'' என உத்தரவிட்டு தனது மருமகனாகிய பிரிகேடியர் திஸ்ஸ வீரதுங்கவை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பினார். அங்கே இராணுவ கெடுபிடிகள் முடுக்கி விடப்பட்டு பல தமிழ் இளைஞர்கள் சித்திரவதைக்குட்படுத்தி கொலை செய்யப்பட்டு வீதிகள் தோறும் வீசப்பட்டகதை தெரிந்ததே.

### 1983ல் மீண்டும் இனக்கலவரம்

1978 ல் சர்வபலம் கொண்ட நிறைவேற்று ஜனாதிபதி அரசியலமைப்பினை இயற்றிய ஜே.ஆர், தெரிவு செய்யப்படும் ஒரு பாராளுமன்றம் தன்னை ஆட்டிப்படைக்க முடியாது என செருக்குடன் கூடிய போக்கினை கையாண்டதுடன் 1982ல் இடம்பெற இருந்த பொதுத் தேர்தலை அன்று நடத்திய அசிங்கமான சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் ஒத்தி வைத்தார். பின்பு 1983 ஜுலை மாதத்தில் முன்னெப்போதையும் விட படுமோசமான இனக்கலவரம் தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்டது. தமிழ் மக்களை அடிபணியச் செய்து அவர்களின் விடுதலை போராட்டத்தையும் நசுக்குவதற்காகவே அக்கலவரம் ஏவப்பட்டது. அதற்கு சாட்டாக யாழ்ப்பாணத்தில் 13 சிங்கள இராணுவத்தினர் தமிழீழ விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்ட சம்பவம் பயன்படுத்தப்பட்டது.

### இலங்கை இந்திய ஒப்பந்தமும் மாகாணசபை முறையும்

மேற்படி கலவரத்தையடுத்து இந்திய அரசாங்கம் கொடுத்த அழுத்தம் காரணமாக ஜே.ஆர்.எல்லா கட்சிகளையும் ஒரு வட்டமேசை மாநாட்டிற்கு அழைத்தார். ஒரு வருடமாக நடைபெற்ற மாநாடு பூச்சியத்திலேயே முடிந்தது. அதன் பின்னரே இலங்கை இந்திய ஒப்பந்தம் ஒன்றினை ராஜீவ் காந்தி - ஜே.ஆர் இருவரும் செய்து கொண்டதை அடுத்து மாகாண சபை முறை கொண்டுவரப்பட்டது. அதன் கீழ் மத்திக்கும் மாகாணத்திற்கும் ஒதுக்கப்பட்ட அதிகாரங்களிற்கு புறம்பாக ஒரு பொதுப்பட்டியலும் உள்ளடக்கப்பட்டதாலும் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டிருந்த குறைந்த பட்ச அதிகாரங்கள் தானும் மத்தியினால் அமுக்கப்பட்டதனாலும் அத்திட்டம் பிரயோசனமானதாக அமையவில்லை. அன்று மேல்



மாகாண முதலமைச்சராய் இருந்தவராகிய இன்றைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தனக்கு அதிகாரங்கள் எதுவும் இன்றி ஒரு அதி உயர்தர லிகிதர் போல் வீற்றிருக்க வேண்டியிருப்பதாக வருந்தினார். மறுபுறத்தில் ஓய்வு பெற்று சற்று நீண்ட காலம் சென்றபின் ஒரு சந்தர்ப்பத்தில் ஜே.ஆர். ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் தமிழ் இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறை தான் உகந்த தீர்வாக இருந்திருக்குமாயினும் தனது பதவிக் காலத்தில் அதனை செய்ய தன்னிடம் துணிச்சல் இருக்கவில்லை என்று கூறி வைத்தார்.


(தொடரும்)

www.padippakam.com



# பின் நவீனத்துக்கு ஓர் அறிமுகம்

கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தின



மார்க்சிய சிந்தனை வரலாற்றில் ஸ்டாலின் சிந்தனை ஒரு பெரும் நெருக்கடியை உருவாக்கியது. இதேவேளை ரொட்ஸ்கிய சிந்தனை மனிதத் தன்மையை வலியுறுத்திய சிந்தனையாக அமைந்தது. ரொட்ஸ்கிய சிந்தனை கலைஞர்களாலும் சமூக சீர்திருத்தவாதிகளாலும், பெரிய அளவில் வரவேற்கப்பட்டது. ரொட்ஸ்கிய சிந்தனையை விரும்பிய குறிப்பிட்ட இந்த பிரிவினர், தம்மை தொழிற்சங்க இயக்கத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்காக, ரொட்ஸ்கிய சிந்தனையை உபயோகித்தனர்.

ஐரோப்பா கண்டத்தில் ஸ்டாலின்வாதம் ரூசியா, போலந்து, செக்கஸ்சுலோவாக்கியா ஆகிய நாடுகளில் ஏற்பட்ட போராட்டங்களினால், வீழ்ச்சியுற்றது. இதேவேளை ரொட்ஸ்கியவாதிகள் எனப்படுபவர்களால், பின்பற்றப்பட்டு வந்த தூய மனிதத்துவம் என்பதற்கு எதிராக மார்சீயவாதத்தை ஒரு விஞ்ஞான ரீதியான முறையில், ஆராய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இத்தகையோர், ஸ்டாலினிச முறையிலான, வாய்ப்பாட்டு ரீதியான, வர்க்கப் போராட்டத்தை அறவே வெறுத்தனர். அத்துடன் இயங்கியல் முறைமை, யதார்த்த ரீதியான பொருளாதார கருத்துக்களிலிருந்து வேறுபடுத்தப்பட்டது. மேற்படி போக்கில், சமூகப் பிரச்சினைகள் மீது, புதியதொரு தர்க்கரீதியான முறைமையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதுவே பின் நவீனத்துவத்தின் ஆரம்பமாகும்.

''எப்பொருள் யார்யார்வாய் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள்காண்பது
அறிவு''

என்பது வள்ளுவர் வாக்கு. இதேபோல் எத்தகைய புதிய சிந்தனைகளையும், புதிய விமர்சனங்களையும் முன்வைப்பதற்கு யாருக்கும் உரிமை உண்டு. ஆனால் யதார்த்தவாதத்தை நேசிக்கின்ற ஒருவர் இக்கருத்துகளை அக்குவேறு ஆணிவேறாக ஆராய்ந்து பார்ப்பதையே விரும்புவார். அதேபோல் இவ்விடயங்கள் உரிய முறையில் ஆராயப்பட வேண்டும். இது ஆட்களுக்கும், தனிப்பட்ட உறவு முறைகளுக்கும் பொருந்தும்.

பின் நவீனத்துவாதிகள் பொருளாதாரம் தொடர்பாக வரலாற்று ரீதியான ஆய்வு முறைக்கு பதிலாக இனத்துவம், மொழி, கலாச்சாரம், இசை ஆகியவற்றை ஆராய்வது முக்கியம் எனக் கருதுகின்றார்கள். வர்க்க ஆய்வுக்கு மேலாக இனத்துவம், கலாச்சாரம், பாலியல் போன்றவை சமூகப் பிரச்சினைகளை நிர்ணயிப்பதற்கு கவனத்தில் எடுக்கப்படுகின்றன. வரலாற்றில் மார்க்சீயவாதிகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளாத விடயங்களான பலதுறைகள் இங்கு முக்கியத்துவப்படுகின்றன. இசை, காதல், நடை, உடை பாவனை ஆகியன இவற்றுள் சிலவாகும்.

மனது என்பதன் பௌத்த ரீதியிலான ஆய்வினை இயங்கியல் முறையுடன் தொடர்பு படுத்துவதற்கு நாங்கள் மேற்கொண்ட முயற்சிகள், பின்நவீனத்துவத்துக்கு நாங்கள் செய்த சாதகமான பங்களிப்பு என கொள்ளலாம்.

பின் நவீனத்துவத்தில் சாதகமாக நோக்கப்பட வேண்டிய கருத்துக்களும் உள்ளன. அதாவது சமூக பொருளாதாரத் துறைக்கு அப்பாற்பட்ட சாட்சியங்களை அது உள் கொண்டுள்ளது. அதேவேளை பொருளாதாரத் துறைகளையும், வர்க்க போராட்டத்தையும் உதாசீனம் செய்யும் பின்நவீனத்துவத்தின் போக்கானது, சந்தர்ப்ப வாத நிலைக்கு இட்டுச் செல்லும் நிலையை உருவாக்கும்.



# பிஞ்சுகள் தொழில் செய்யும் கொடுமை



கல்வியே உயிராக கொள்ளும் சமூகம் வடக்கு கிழக்கு சமூகமாகும். இம் மண்ணின் எந்த பகுதிக்கு சென்றாலும் புத்தகங்களுடன் செல்லும் பிள்ளைகளையே எங்கும் பார்க்க முடியும். இன்று யுத்தம் என்னும் தீச்சுவாலை இப்பிராந்தியத்தில் உள்ள சிறார்களின் கல்வியை பொசுக்கி உள்ளது.

இன்று வடக்கு கிழக்கில் 60,000 குழந்தைகள், கல்வியை இழந்து வாழ்கின்றார்கள். 20,000 மேற்பட்ட இளம் சிறார்கள், தொழில் செய்யும் கோரம் அங்கு தாண்டவம் ஆடுகின்றது. யுத்தத்தின் உயிர் அழிவுகளையும் இழப்புக்களையும் பற்றிய செய்திகள் எம் காதில் விழுவதால் சிறார்களின் வாழ்க்கை நிலைமை அமுங்கிப் போய் இருக்கிறது. சிறார்களை தொழிலுக்கு அமர்த்துவதால் அதிக நன்மை என்பதால், லாபம் கருதும் கழுகுகள், இப் பிஞ்சுகளை தொழிலுக்கு அமர்த்துகின்றனர். சிறுவர்கள் வேலை செய்யும் நிலை கிழக்கு மாகாணத்திலேயே அதிகமாக இடம் பெறுகின்றது.

மீன்பாடும் தேன் நாடாம் மட்டக்களப்பு இன்று யுத்தத்தின் கோரத்தால் சின்னாபின்னமாகியுள்ளது. கணவனை பறி கொடுத்த நிலையில் 10,000 மேற்பட்ட பெண்கள் துயரமான நிலை வாழ்கின்றனர். இவர்களுக்குரிய மறுவாழ்வு உதவிகள் எல்லாம் கண்துடைப்பாகவே உள்ளன. பெரும் விவசாய நிலங்களை தன்னகத்தே வைத்திருக்கும் கிழக்கு பூமியில் யுத்தத்தின் கொடுமையில் விவசாயமே சீரழிந்து போய்கிடக்கிறது.

இந்நிலையில் இங்குள்ள சிறுவர்களின் நிலை மிகவும் பரிதாபகரமான நிலையை எட்டியுள்ளது. யுத்தத்தின் தாக்கத்தால் குடும்பத்தலைவனை இழந்த குடும்பங்களும், உழைத்து வருமானத்தை பெறக்கூடிய ஆண்களை பறி கொடுத்த குடும்பங்களும் அனேகம் உள்ளன.

ஏற்கனவே வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் அனேக குடும்பங்கள் மட்டக்களப்பில் உள்ளன. இதனால் இன்றைய யுத்தத்தின் பாதிப்பில் அனேக குடும்பங்களுக்கு தொழிலும் இல்லை. தொழிலை செய்வதற்கும் ஆண்கள் இல்லை. இதனால் சிறுவர்களும் தொழிலுக்கு செல்ல வேண்டிய சோகமானதொரு நிலை அங்கு காணப்படுகிறது.

இன்று இலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அதிக சிறுவர்கள் தொழில் செய்யும் அபாய நிலை காணப்படுகிறது. 10,000 மேற்பட்ட சிறார்கள் தமது குடும்பங்களை காப்பாற்ற தொழில் செய்யும் கட்டாய நிலையில் வாழ்கின்றனர். மட்டக்களப்பு மாநகர எல்லைக்குள் மட்டும் 1000 மேற்பட்ட சிறுவர்கள் தொழில் செய்வதாக தெரிய வருகிறது. யுத்தமேகம் திரண்டு கிழக்கு மாகாணத்தையே மூடியுள்ளதால், மனித உரிமைகள் பற்றிய குரல்களே வெளியுலகிற்கு கேட்கிறது. சிறுவர்கள் தொழில் செய்தல் போன்ற விடயங்கள் அமுங்கி போய் உள்ளன. இதைப் பற்றிய அக்கறையோ அனுதாபமோ அரச தரப்பினருக்கு சொற்ப அளவில் கூட இல்லை என்றே கூறவேண்டும்.

சிறுவர்கள் பல்வேறு தொழில்களுக்கு, அமர்த்தப்படுகின்றனர். இச்சிறுவர்கள் பெரும்பாலும், வாழைச்சேனை கிண்ணியடி, கதிரவெளி, கல்குடா போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்களாகவே உள்ளனர். பெரும்பாலும் 8 வயதுக்கும் 16 வயதுக்கும் இடைப்பட்டவர்களாகவே அனேக சிறுவர்கள் உள்ளனர். சிறுவர்களை வீட்டு வேலைக்கே அதிகமாக அமர்த்துகின்றனர். இதைவிட கடைகளிலும் வீதிகளிலும் ரிக்கற் விற்பனை செய்யவும் அமர்த்தப்படுகின்றனர். கொழும்புக்கு கூட குறிப்பாக நகைத் தொழிலுடன் சம்பந்தப்பட்ட வேலைகளுக்கு சிறுவர்கள் கொண்டு வரப்படுகின்றனர். இச்சிறுவர்களைக் கொண்டு தினமும் 16 மணித்தியாலத்துக்கு மேலாக வேலையை வாங்குகின்றனர். வேலை செய்ய பின் நின்றால் வழங்கப்படும் தண்டனை மிகக் கடுமையாகக் காணப்படுகின்றது. நெருப்பு கோலால் சுடுதல் போன்றவை அனேகமாக வழங்கப்படும் தண்டனையாக உள்ளது. சில சமயங்களில் மரணம் கூட சம்பவிப்பதும் உண்டு. பாலியல் துஸ்பிரயோகங்களும் இடம் பெறுவதாக தெரியவருகிறது. குழந்தைகளை வேலைக்கு வைத்திருப்பது ஒரு கௌரவமான நிலை என எமது தமிழர் சமூக வசதியானவர்கள் எண்ணுவது கவலைக்குரியதாக உள்ளது. சொந்த சகோதர மக்கள் யுத்தத்தால் பரிதவிக்கும் போது இவர்களின் குழந்தைகளை கசக்கி, பிழிந்து லாபம் அடைய நினைப்பது எவ்வளவு கேவலமானதாகும்.

சிறுவர்களை பாதுகாப்பதற்கு பல்வேறு சட்டங்களையும் பிரகடனங்களையும் இலங்கை அரசு நாளாந்தம் பிரகடனப்படுத்தினாலும், அதனால் என்ன பயன் விளையப் போகிறது. பாடசாலைக்குச் செல்லும் மாணவ செல்வங்கள் துப்பாக்கி குண்டுக்கு பலியாகின்றனர். கைதுகளும் மர்மக் கொலைகளும், மலிந்து காணப்படும் ஒரு யுத்த பூமியில், சிறுவர்களின் நலனை காப்பதற்குரிய அமைப்புக்கள் சீராக இயங்குமா? வீதியால் செல்ல அச்சப்படும் மக்கள் பொலிஸ் நிலையம் சென்று சிறார்கள் பற்றி புகார் கொடுக்க முன் வருவார்களா?

சிறுவர் பருவம் மிகமுக்கியமான பருவமாகும். வருங்காலத்தில் தமது வாழ்வை வளம்படுத்த எத்தனையோ விடயங்களை அறிய வேண்டிய பருவத்தில், இப்பிஞ்சுகள் வேலைக்குச் சென்று கருகும் நிலை தோன்றியுள்ளது. இன்றைய சிறார்களை நாளைய சமுதாயத்தலைவர்கள் தமிழ் சமூகம் என்னென்ன வழிகளில் துன்பங்களை சுமக்கின்றன என்பதை இவை போன்ற விடயங்கள் மூலமே உணர முடிகிறது.

குழந்தைகளை தொழிலுக்கு வைத்திருப்பதால் பல்வேறு நன்மைகள் உண்டு. விரும்பியவாறு வெருட்டி வேலை வாங்கலாம். சம்பளம் மிகக் குறைவு, உணவு, உடை போன்றவற்றிலும் வேண்டியளவு சிக்கனங்களை கடைப்பிடிக்கலாம். இன்று கிழக்கு மாகாண வீதிகளில் அலையும் சிறார்களில் அனேகமானவர்கள் வீட்டில் வேலை செய்யப்போய் எஜமானர்களால் பதம் பார்க்கப்பட்டவர்களே. யாழ் குடாநாட்டிலும் சிறார்கள் தொழில் நிலை அதிகரிக்கின்றது. யாழ். குடாநாட்டிலும் 15,000 மேற்பட்ட பெண்கள் கணவனை இழந்து இருக்கின்றனர். இதனால் பல குடும்பங்கள் வருமானங்களை இழந்து நிற்கின்றன. யாழ்ப்பாணத்தில் தாய், தந்தையாரை இழந்த நிலையிலும், அனாதரவான நிலையில் 7218 குழந்தைகள் உள்ளதாக அஞ்சப்படுகிறது. அனாதரவான நிலையில், 485 குழந்தைகளும், தாய் அல்லது தந்தையை இழந்து 6587 குழந்தைகளும் பெற்றோரால் பரிதவிக்கவிடப்பட்ட 146 குழந்தைகளும் உள்ளதாக தெரியவருகிறது. கூலி வேலையில் 1465 குழந்தைகள் ஈடுபட்டுள்ளதாகவும் 1367 குழந்தைகள் சொந்த வீட்டிலேயே வேலை செய்வதாகவும், இவர்களில் 603 சிறார்கள் மீன்பிடி தொழிலும் 199 பேர் வேறு குடும்பங்களிலும் தொழில் செய்கின்றனர். தமது குடும்ப வருமானத்தை அதிகரிப்பதற்காக இக்குழந்தைகள் சிறுவயதிலேயே பாடசாலைக்கு முற்றுப்புள்ளி வைப்பதாக தெரியவருகிறது. தென் ஆசிய நாடுகளில் குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவது பொதுவான பிரச்சினையாக காணப்படுகிறது. இலங்கையில் கூட சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தும் இடங்களில் நிகழும் கொடுமைகள் தினசரி செய்திகளாக வந்து கொண்டு இருக்கிறது. பாதுகாப்பு துறையோடு சம்பந்தப்பட்டவர்களின் உதவிகள் குற்றம் இளைப்போருக்கு துணையாக இருந்தால், இந்த விடயம் வெளியே தெரியாமல் இருப்பதற்கு சந்தர்ப்பம் அதிகமாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தை பொறுத்த வரையில் சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதற்கு பிரதான காரணியாக யுத்தமே அமைகிறது.

(தொடர்ச்சி பக்கம் 6)

படிப்பகம்

www.padippakam.com





# இனவாதம், பெண்கள், வன்முறைகள்

இனவாதம் இன்று உலகில் மலிந்து காணப்படுகின்றது. இது ஒரு வன்முறை தத்துவமாகும். காலத்துக்கு காலம் இடம் பெறும் ஒரு விடயமாக இல்லாது, நாளாந்தம் இடம் பெறுகின்ற ஒரு நிகழ்ச்சியாக இனவாதம் மாறிவிட்டது. பெண்களே அதிகளவு இனவாதத்தால் பாதிக்கப்படுகின்றனர். இனவாதிகள் எதிர்தரப்புப் பெண்களை மாத்திரம் பாதிப்புக்கு உள்ளாக்குவதில்லை தமது சமூகத்தில் இருக்கும் பெண்களுக்கும் இவர்கள் பல்வேறு வழிகளில் சொல்லொணா துயரங்களைக் கொடுத்து வருகின்றனர். இனவாதத்தால் பெண்களே அதிகமாக பாதிக்கப்படுகின்றனர், என்பது உண்மையாயினும், இனவாத வன்செயல்களின் போது பெண்களும் அதற்கு காரணமாக சில சமயங்களில் அமைந்து விடுகின்றனர்.

தற்போது இந்தியாவில் பாரதீய ஜனதா கட்சியே பதவியில் இருக்கிறது. இக்கட்சி ஆட்சியில் இருப்பதற்கு எதிராக பல பெண்கள் அமைப்புக்கள் குரல் கொடுத்து வருகின்றன. வன்முறையை தூண்டிவிடும் கட்சி, சிறுபான்மையினருக்கு எதிரானது பெண்களுக்கு எதிரானது, என பல்வேறு குற்றச்சாட்டுகளை சுமத்தி வருகின்றன. பாரதீய ஜனதா கட்சி இக்குற்றச்சாட்டுக்களை நீதிமன்றில் நிரூபிக்குமாறு மார்தட்டியது. வெளியுலகிற்கு பாரதீய ஜனதா கட்சி இங்ஙனம் ஆக்கிரோசமாக காட்டிக் கொண்டாலும் உண்மையில் அது ஒரு அடிப்படைவாத இந்துத்துவக் கட்சியாகவே உள்ளது. பெண்களுக்காகப் போராடும் அமைப்புக்கள் கூட தமது அமைப்பு ரீதியான உரிமைகளை பெறுவதில் இருக்கும் ஆர்வம் ஏனைய விடயங்கள் சம்பந்தமாக இல்லாது காணப்படுகின்றது.

1984ல் இரண்டு ஆசனங்களை மட்டுமே, கொண்டிருந்த பாரதீய ஜனதா கட்சி பின்பு இந்து அடிப்படைவாதிகளுடன், இணைந்து, இந்துத்துவக் கட்சியாகவும் இனவாதக் கொள்கைகளையும் முன்னெடுத்தது. குறிப்பாக 'இராம ஜென்ம பூமி' என்ற சுலோகத்தை முன்வைத்து இந்து இளைஞர்களை தீவிரத்தன்மைக்கு இட்டுச் சென்றது. இதன் விளைவாக 1992ம் ஆண்டு டிசம்பர் மாதம் 6ம் தேதி பாபர் மசூதி இடிக்கப்பட்டது. இதனால் 1947ல் பாகிஸ்தான் பிரிந்தவேளையில் ஏற்பட்ட இனக்கலவரத்தை போன்றதொரு இனக் கலவரத்தை முஸ்லீம் சமூகம் சந்தித்தது.

இனக்கலவரங்கள், அகமபாத், போபால், சூரத் போன்ற இடங்களில் திட்டமிட்டபடி நடத்தப்பட்டன. இந்துப் பெண்கள் தாக்கப்பட்டனர் என்ற வதந்திகள் மூலம் முஸ்லீம்கள் மீது கொடிய வன்முறைகள் புரியப்பட்டன. இன்று உயிருடன் இருப்பவர்களின் தகவல்களின் அடிப்படையில் கொல்லப்பட்டவர்கள், பாலியல் வல்லுறவுக்கு உட்பட்டவர்கள், பெருந்துயரங்களுக்கு உள்ளானவர்கள் பற்றிய தகவல்களை அறிய முடிகிறது. முஸ்லீம் பெண்களுக்கு பாதுகாப்பு கொடுத்த இந்துப் பெண்கள் மிரட்டப்பட்டனர். இந்துவாதிகள் பெண்கள் என்பது இந்துப் பெண்கள் என்பதாகவே கொள்கின்றனர். இதே வேளை இக்கலவரங்களில் இந்துப் பெண்கள் பலர் ஈடுபட்டதாக தெரிய வருகிறது. இக்காலப்பகுதியில் காஷ்மீர் முஸ்லீம்கள் மத்தியிலும் அடிப்படைவாத தன்மைகள் மேலோங்கிய நிலை காணப்பட்டது. அங்குள்ள பெண்கள் அமைப்பு ஒன்று முஸ்லீம் பெண்களை முகத்தை மறைக்கும் துணியை போடுமாறு கட்டாயப்படுத்தியது.

இந்தியாவில் உள்ள அடிப்படைவாத அமைப்புக்களுக்கு ஏனைய அரசியல் கட்சிகளுடன் நடைமுறையில் இருக்கும் அரசியல் ஜனநாயக கட்டமைப்பினுள் இயங்க வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. எனவே அடிப்படைவாத பெண்கள் அமைப்புக்கள் பெண் உரிமையை மையமாக வைத்து அபிவிருத்தி அடையத் தொடங்கியது. ஆனாலும் இவை யாவும் வீண்முயற்சிகளே. பாரதீய ஜனதாவின் உண்மையான நிலைப்பாடு ஆண் ஆதிக்க சமுதாய வெறியேயன்றி வேறல்ல. அதை வலுப்படுத்துவதிலேயே பி.ஜே.பி. கண்ணும் கருத்துமாக இருந்தது. இந்து இனவாதிகள், இந்தியாவின் ஜீவநாடியாக இந்துமதம் இருக்க வேண்டும் என்பதை விரும்பினார்கள். இஸ்லாமும், கத்தோலிக்க மதமும் அந்நிய சக்திகள் என்றே கருதினார்கள். பெண்களுக்கான சுதந்திரம், சமத்துவப் போராட்டங்களை மிக மோசமாக கண்டனம் செய்தார்கள். எம்முள் இருக்கும் எதிரிகள் இவர்கள் எனவும் இப்போராட்டங்களை வரைவிலக்கணப்படுத்தினர். பெண்களின் உரிமைகளுக்காக போராட்டங்களை நடத்திக் கொண்டு இருப்பவர்கள் இத்தகைய பிரச்சினைகளை கண்டும் காணாதது போல் விடமுடியாது. ஆனால் பெரும்பான்மையான இந்திய தொடர்புசாதனங்கள், பெண்கள் பிரச்சினையை முஸ்லீம் பெண்கள் பிரச்சினையாக மட்டும் கருதி மிக மலிவாக செய்தி வெளியிடுவது வருந்தத்தக்கதாகும்.

எந்த இனவாதத்தாலும் பெண்கள் பாதிக்கப்படுகின்றனர். முஸ்லீம் பெண்கள் மாத்திரம் உரிமை இல்லாது உள்ளார்கள் என்பது தவறானதாகும். இன்று இந்திய அரசியலில் இந்து இனவாதிகளின் ஆதிக்கமே பலமாக உள்ளது. இந்து இனவாதியின் கருத்துப்படி முஸ்லீம் இனவாதிகள் வன்முறையில் ஈடுபடும் போது, இந்து பெண்களுக்கு எதிராகவும், முஸ்லீம் பெண்களுக்கு எதிராகவும் வன்முறை செய்கின்றார்கள் என குறிப்பிடுகின்றார். ஆனால் இந்து ஆண் ஒருவர் பெண்களுக்கு எதிராக வன்முறையில் ஈடுபடுவதில்லை, ஏனென்றால், இந்து ஆண்கள் இயற்கையாகவே உயர்ந்த குணங்களை கொண்டவர்களாக இருப்பதாலேயே ஆகும் என்கிறார். இந்த கருத்தை உள்நோக்கி ஆராயும் போது, ஒரு இந்துப் பெண் இந்துப் பெண்ணுக்குரிய தகுதிகளை கொண்டிருக்காவிட்டால், அவர்களுக்கு இந்து இனவாதிகள் உரிமைகளை வழங்க மறுக்கின்றார்கள். பொதுவாகவே பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்பதற்கு, பெண்கள் சமஉரிமை கோருவதால் இந்த நிலை ஏற்படுகிறது என, இந்து வலதுசாரி பெண்மணி ஒருவர் தெரிவித்து இருக்கிறார். இவரது கருத்துப்படி பெண்களுக்கு சம உரிமை என்பது மேற்குலக கருத்தாகும். மேற்குலகில் பெண்கள் கீழ்த்தரமாக நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன் வசீகரத்தை கொண்டு ஒழுக்க மற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன், வன்முறைகளை உருவாக்குபவர்களாகவும் உள்ளனர். இவற்றுக்கு தீர்வாக பெண்களின் ஜனநாயக உரிமைகளை குறைப்பதே ஒரேவழி என்பதே இவர்களின் நிலைப்பாடாக உள்ளது. இந்து இனவாதம் என்பது முஸ்லீம் இனவாதத்தை விட வேறானது அல்ல. அத்துடன் அடிப்படைவாதங்களை விட வேறானதும் அல்ல. தற்போது ஐக்கிய அமெரிக்காவில் கூட கருச்சிதைவு மருத்துவமனையை 'உயிர் வாழும் உரிமை' என்ற அமைப்பினர் அடிக்கடி தாக்கி வருகின்றனர். அண்மையில் நான்கு கன்னியாஸ்திரிகள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியமைக்கு, விஸ்வ இந்து பரிஷத்தின் பொதுச் செயலாளர் கருத்து தெரிவிக்கையில், மதமாற்றம் செய்ய முனைந்ததால் ஏற்பட்ட விளைவாகும் என்று தெரிவித்துள்ளார். இனவாதிகள் பாலியல் வல்லுறவு பிரச்சினையை அரசியல் பிரச்சாரத்துக்காக மட்டும் பயன்படுத்துகிறார்கள் மறுபக்கத்தில் பாலியல் வல்லுறவை செய்தவருக்கு தூக்கு தண்டனை வழங்க வேண்டும் என்றும் குரல் கொடுக்கின்றார்கள். இத்தகைய பிரச்சாரங்கள் குற்றவாளிகளை சுதந்திரமாக நடமாட வழி செய்யும். அத்துடன் இவ்வகையான குற்றச் செயல்கள் அதிகரிக்கவும் வாய்ப்புக்கள் ஏற்படும்.

இந்து இனவாதிகள் பெண்கள் தான் விரும்பும் ஆணை தெரிவு செய்யும் உரிமைக்கு எதிராகவும், இந்து பெண்கள் வேறு மதத்தவரை மணந்து கொள்ளும் உரிமைக்கு எதிராகவும் கண்டனம் தெரிவித்துள்ளனர். இது சம்பந்தமாக விஸ்வ இந்து பரிசத்தின் தலைவர்களில் ஒருவரான கலாபென்பட்டேல் கருத்து தெரிவிக்கையில், இந்து பெண்களை மையமாக வைத்து முஸ்லீம்கள் சதி இது என விவரித்துள்ளார். ஆ.எஸ்.எஸ். பொதுச் செயலாளர் கார்சாட்சா சென்னையில் கருத்து தெரிவிக்கையில் முஸ்லீம் இளைஞர்களுக்கு இந்து பெண்களுக்கு எப்படி தீமை செய்வது என்று போதிக்கப்படுகிறது என குறிப்பிட்டுள்ளார்.

50 ஆண்டுகளுக்கு முன்பு இந்து குடும்ப சட்டம் மூலம் பலதார மணம் இல்லாது ஒழிக்கப்பட்டது. ஆனாலும் பலதார மண நடைமுறை இந்து சமூகத்தில் இன்றும் வழக்கில் உள்ளது.

இந்து இனவாதியான பால் தாக்கரே ஒருபோதும் ஆபாசத்துக்கு எதிராக போராட முன்வரவில்லை. ஆனால் ஆபாசமே பெண்களுக்கு எதிரான உண்மையான வன்முறைக் காரணியாகும். பயர் என்ற திரைப்படத்துக்கு எதிராக இவர் யுத்தம் ஒன்றை பிரகடனப்படுத்தியிருந்தார். இப்படத்தில் இரண்டு பெண்கள் பாரம்பரிய திருமண உறவு முறையை கைவிட்டு விட்டு, தன்னின சேர்க்கையில் ஈடுபடுவதை சித்தரிக்கின்றது.

இந்தியாவை காப்பாற்றுங்கள் என இனவாதிகள் விடும் அறைகூவல் உண்மையில் சமூகத்தின் சிவில் உரிமைகளை நாசப்படுத்துவதற்கே ஆகும். இதனுடன் பெண்களின் பாலியல், சுதந்திர உரிமைகளை சிதறடிப்பதற்கு இவ் அறை கூவலை இவர்கள் விடுப்பதுண்டு. இனவாதிகள் பெண்களை வரைவிலக்கணப்படுத்தும் போது, முஸ்லீம் பெண்களை இவர்கள் கருத்தில் கொள்ளவில்லை. அத்துடன் ஒடுக்கப்பட்ட சமூக பெண்களையும் மேற்குலக கலாச்சாரத்தை பின்பற்றும் பெண்களையும் பெண்கள் உரிமைகளுக்காக போராடும் பெண்களையும், இவர்கள் பெண் என வரைவிலக்கணப்படுத்தவில்லை. இரண்டாவது உலக மகாயுத்தத்தின் போது நாஜிகள் பல லட்சம் யூதமக்களை கொன்றொழித்து விட்டு அவர்களை மனிதர்கள் அல்லாதவர்கள் என வரைவிலக்கணப்படுத்தியதை உலகம் அறியும். இதே போலவே இந்தியப் பெண்களில் ஒரு பிரிவினரை பெண்கள் அல்ல என இந்த இனவாதிகள் வரைவிலக்கணப்படுத்தியிருப்பதன் அர்த்தம் என்ன? இந்து இனவாதிகளிடம் இந்திய சமூகம் எதை எதிர்பார்க்கின்றது.

**(நவசமசமாஜ கட்சி அங்கம் வகிக்கும் உலக இடது சாரி அமைப்பாகிய 4 வது அகிலத்தின் மாதாந்த ஆங்கில ஏடாகிய ''இன்ரநஷனல் வியூபோயின்ர் இதழில் வெளிவந்த கட்டுரையினை தழுவி எழுதப்பட்டது.)**

ஐந்தாம் பக்கத் தொடர்ச்சி...

## பிஞ்சுகள்....

யுத்தத்தினால் சிவில் நிர்வாகம் நிலை குலைந்து போய் உள்ளதால் இத்தகைய விடயங்கள் வெளியுலகிற்கு தெரியாமல் நிகழ்கின்றன. இன்று வசதியுடன் வாழும் ஒரு குடும்பம் ஒரு சதத்துக்கும் வழியில்லாமல் தெருவில் நிற்கும் நிலை ஏற்படலாம். யுத்தம் என்பது ஒரு கறையான் போன்றது. அது சமுதாயத்தை அரித்துக் கொண்டே செல்லும். சிறார்கள் வேலைக்கு அமர்த்தப்படும், கொடுமையான செய்தி மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து வெளிவந்துள்ளது. தமிழ் மக்கள் வாழும் ஏனைய பகுதியில் இருந்தும் எதிர்காலத்தில் மேலும் பல கொடுமையான தகவல்கள் வரலாம்.

நாளைய தமிழ் சமுதாயத்தின் இளங்குருத்துக்கள், காய்ந்து போகாமல் பாதுகாப்பது எம் எல்லோரதும் கடமையாகும். யுத்தம் என்ற காரணத்தை வைத்துக் கொண்டு இப்பாதக செயல் தொடர்வதற்கு தொடர்ந்தும், வழியமைக்காமல் ஒன்றிணைந்து செயற்படுவோம்.

படிப்பகம்

www.padippakam.com



# திராவிட இயக்கம் - ஒரு எக்ஸ்ரே



## 'சென்னை திராவிடர் சங்கம்'

இன்றைக்குத் தமிழகத்தில் இருக்கிற பல திராவிடக் கட்சிகளுக்கு வேர் எது என்று பார்த்தால் அது இந்தச் சங்கம் தான். அதாவது பிராமணரல்லாதவர்களுக்காக, பிராமணர்களின் ஆதிக்கம் அதிகரித்து வருவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதத்தில் உருவான இந்தச் சங்கம் துவங்கிய வருடம் 1912. துவக்கியவர் டாக்டர். சி.நடேசன்.

அந்த இயக்கமே தென்னிந்திய நல உரிமைச் சங்கமாகி, பிறகு நீதிக்கட்சியாயிற்று. 1920-ல் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெல்லுமளவுக்கு வளர்ச்சியடைந்தது, அதன் சார்பில், தமிழகத்தில் முதல்வரானவர் சுப்பராயலு ரெட்டியார். மறு வருஷமே இட ஒதுக்கீட்டை இந்தியாவுக்கே அறிமுகப்படுத்தும் விதத்தில் ''வகுப்புவாரி பிரதிநிதித்துவ'' அரசு ஆணை வெளியாயிற்று. தொடர்ந்து 1937 வரை நீதிக்கட்சியின் ஆட்சிதான்.

காங்கிரசில் இருந்தாலும் சாதிப் பாகுபாட்டை, வேற்றுமையை எதிர்த்து காங்கிரசில் தீர்மானம் கூட இயற்ற முடியாத அதிருப்தியில் இருந்த ஈ.வெ.ராமசாமி நாயக்கர் 1927-க்குப் பிறகு நீதிக்கட்சியை ஆதரித்தார்.

1944, ஆகஸ்ட் 27ல் சேலத்தில் நடந்த நீதிக்கட்சி மாநாட்டில் நீதிக்கட்சியின் பெயர் 'திராவிடர் கழகமாக' மாறியது. ''திராவிட நாடு திராவிடருக்கே'' என்கிற முழக்கத்துடன் அண்ணாவால் துவக்கப்பட்ட பத்திரிகையின் பெயர் 'திராவிட நாடு' இந்தியா சுதந்திரம் அடைந்த பேர்து அதை ''துக்க நாள்'' என்றார் பெரியார். திராவிடர் கழகத்திலிருந்த அண்ணாவோ வரவேற்றார். அரசியல் இயக்கமாகித் தேர்தலில் பங்கு பெற வேண்டும் என்கிற எண்ணத்தில் இருந்த அண்ணா, 'பெரியார் - மணியம்மை' திருமணத்தைக் காரணம்காட்டி, திராவிடர் கழகத்திலிருந்து 'கண்ணீர்த்



துளியுடன்' வெளியேறினார் தி.மு.க. உருவானது.

1949, செப்டம்பர் 17-ம் தேதி சென்னை ராபின்சன் பூங்கா அருகில் மழை நேரத்தில் தி.மு.க.வின் முதல் கூட்டம். பாரதிதாசன் முதல் பேச்சாளராக அறிவிக்கப்பட்ட அந்தச் சுவரொட்டியில் 28வதாக கடைசிப் பேச்சாளராக இருந்தவர் மு.கருணாநிதி.

''அடைந்தால் திராவிட நாடு; இல்லையேல் சுடுகாடு'' என்றெல்லாம் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தினர், மத்திய அரசிடமிருந்து பிரச்சினை வந்ததும் திராவிட நாட்டைக் கைவிட்டுவிட்டு, 57-ல் திருச்சியில் ஒரு மாநாட்டைக் கூட்டி ''தேர்தலில் நிற்கலாமா? கூடாதா?'' என்கிற ஓட்டெடுப்பையும் நடத்தி 57-ல் தேர்தலில் கலந்து கொண்டதிலிருந்தே திராவிட இயக்கத்தின் சறுக்கல்கள் ஆரம்பமாயிற்று. 1967ல் ஆட்சியைப் பிடித்ததிலிருந்து 'கவர்ச்சிகரமான' திட்டங்களில் மக்களைத் திசை திருப்புவதும் திராவிடக் கட்சிகளின் நடைமுறைத் திட்டமாயிற்று.

''ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி'' என்று அண்ணா அறிவிக்க, 'பிச்சைக்காரர் மறுவாழ்வுத்திட்டம்' 'கண்ணொளித்திட்டம்' என்று கருணாநிதியும், பிறகு எம்.ஜி.ஆர். காலத்தில் சத்துணவுத் திட்டம், இலவச மின்சாரம், இலவச அரிசி, வேஷ்டி என்று கூடிக் கொண்டே போயிற்று.

69 பிப்ரவரியில் நோய்வாய்ப்பட்ட நிலையில் முதல்வராக இருந்த அண்ணா மறைந்த போது அவருக்கு இருந்த பேங்க் பாலன்ஸ் தொகை வெறும் ஆயிரம் ரூபாய். அவருக்குப் பிறகு தொடர்ந்து அண்ணாவின் தம்பிகளும், உடன்பிறப்புகளும், தங்கை(?)களும் பதவியேற்றபோது அண்ணாவின் அந்த எளிமையை யாரும் பின்பற்றியிருக்கிறார்களா? திராவிட இயக்கத்திற்கு நடைமுறை முன்மாதிரியாக தற்போதிருக்கிற திராவிட இயக்கத் தலைவர்களில் யார் தங்களது சொந்த வாழ்க்கையை வைத்திருக்கிறார்கள்?

இதெல்லாம் சாதாரண மக்களுக்கும் திராவிட இயக்கங்களுக்கும் இடைவெளி ஏற்படுத்திக் கொண்டிருக்கும் கேள்விகள்.

ரகசியமாகத் திருப்பதி கோவிலுக்குப் போய்விட்டு வந்ததற்காக ''திருப்பதி கணேசா..... திரும்பிப்பார்...... நீ நடந்து வந்த பாதையை'' என்கிற விமர்சனத்திற்குள்ளானார் (1955ல்) அப்போது தி.மு.க.வில் இருந்தவரான சிவாஜிகணேசன்.

''ஸ்ரீரங்கநாதரையும், தில்லை நடராஜனையும் பீரங்கி வைத்துத் தகர்ப்பது எந்நாளோ?'' என்று 1949-ல் மேடைகளில் பேசின தி.மு.க. குரல்கள் ''பராசக்தி எந்தக் காலத்திலடா பேசினாள்?'' என்று 1952-ல் வசனம் எழுதின கைககள், தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் தங்களது சுருதியை மாற்றிக் கொண்டன. ''ஒன்றே குலம்; ஒருவனே தேவன்'' என்று புது 'தியரி' உருவானது. பிறகு ''ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்'' என்று விளக்கம் கொடுத்தவர்கள் ரொம்பவும் முயற்சியெடுத்து, திருவாரூர், தேரை ஓட்டிப் பரவசப்பட்டார்கள்; 89ல்- திருக்குவளையில் உள்ள குலதெய்வத்தை கருணாநிதி வழிபட்டதாகச் செய்திகள் வெளியாயின. 96ல் திரும்பவும் திருக்குவளைக் கோவிலுக்குப் போனார் கருணாநிதி. 98'ஜூன் 19ம் தேதி திருவேற்காடு கருமாளியம்மன் கோவிலுக்குப் போய் 75 ஜோடிகளுக்குத் திருமணம் செய்துவிட்டுப் பரிசு வழங்கின போது ''இதைக் கருமாரியம்மன் தாய் வீட்டுச் சீர்வரிசையாக ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்று பேசினார் முதல்வரான கருணாநிதி. 97ல்- பண்ணாரி அம்மன் கோவிலில் தி.மு.க. அமைச்சரே தீ மிதித்தார். கருணாநிதியின் வாரிசுகள் இன்று வெளிப்படையாகக் கோவிலுக்குப் போகிறார்கள். ஆஞ்சநேய பக்தரான டி.ராஜேந்தர் தி.மு.க.வின் கொள்கைப் பரப்புச் செயலாளராக முடிகிறது. ஆத்திகரான பி.டி.ஆர் பழனிவேல் ராஜன் சபாநாயகராக முடிகிறது.

தி.மு.கவே இப்படி இருக்கிற போது அ.தி.மு.கவில் சொல்லவே வேண்டாம். முதல்வராக இருந்த போது எம்.ஜி.ஆர். பகிரங்கமாகவே மூகாம்பிகைக் கோவிலுக்குப் போக, ஜெயலலிதா பக்தியில் இன்னும் ஒரு படி மேலே போய் கும்பகோணம் மகாமகத்தில் பலத்த நெரிசலுக்கு இடையில் நீராடும் அளவுக்குப் போய் விட்டார்.

11973-ல் பெரியாரின் மறைவுக்குப் பிறகு உருவ வழிபாட்டை எதிர்த்த பெரியாருக்கு சமாதி வைப்பதில் தி.க.விற்கு ஆரம்பித்த முரண்பாடு இப்போதும் தொடர்கிறது. ஜெயலலிதா பெரியார் அறக்கட்டளைக்கு ஐந்து லட்ச ரூபாய் கொடுத்ததும், 'சமூகநீதி காத்த வீராங்கனை'' பட்டம் கொடுக்கிற அளவுக்குப் போனார் கி.வீரமணி. தமிழகச் சட்டமன்றத்திலேயே ''நான் ஒரு பாப்பாத்தி தான்'' என்று வெளிப்படையாகவே அறிவித்த ஜெயலலிதாவை வீரமணி மட்டும் தொடர்ந்து பார்ப்பனீய எதிர்ப்பையெல்லாம் மீறி ஆதரிப்பது 'கருஞ்சட்டை ஆச்சரியம்'.



''தன்மானத்தை விற்பவன் தமிழனாயிருந்தாலும் சரி, சுயமரியாதைக்காரனென்று கூறிக்கொண்டாலும் சரி, நீதி அனைவருக்கும் ஒன்றே'' (முரசொலி - 5-10-44) என்று எழுதி வருணாசிரம தர்மத்தை எதிர்த்த கருணாநிதி, ''மக்களின் அமைதி வாழ்வுக்குப் பழுது ஏற்படுத்தும் வகையில் 'இந்துத்துவா' என்னும் கொள்கை பேசி, இந்து மேலாண்மையைத் திணிக்க, ஆட்சியைக் கைப்பற்றத் திட்டமிடும் ஒரு கட்சி தமிழ்நாட்டில் வேரூன்ற வழி விடுவது எப்படி நியாயமாகும்?'' (98' தேர்தல் நேரத்தில் க.அன்பழகன்) என்று பேசிய அதே தி.மு.க. 99'தேர்தலில் பாரதீய ஜனதாவுடன் கூட்டணி வைத்தது. ம.தி.மு.க., எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. உள்ளிட்ட இதர திராவிட அடையாளத்தைத் தூக்கிப் பிடித்த கட்சிகளுக்கும் இது பொருந்தும்.

1953ஜூலையில் 'டால்மியா புரம்' என்றிருந்த பெயரை மாற்றி 'கல்லக்குடி' என்று தமிழ்ப் பெயருக்கு மாற்ற ரயில் தண்டவாளத்தில் படுத்த கருணாநிதியின் வேகம் தனது சொந்தக்கார நிறுவனமாகிய சன்.டி.வி. பெயரைத் தமிழ்ப்படுத்துவதில் கூட செயல்படவில்லை. அன்று ஹிந்தியை எதிர்க்க டி.வி,பெட்டியையே உடைத்தவர்கள் என்பதைச் சிரமத்துடன் நினைவு கூற வேண்டியிருக்கிறது.

மாநில சுயாட்சிக் கோஷமும் மத்தியில் திராவிடக் கட்சியில் அங்கம் வகித்த பிறகு வலுவிழக்க ஆரம்பித்து விட்டது. இன்னும் எந்தத் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவரும் 33 வருடங்களுக்கும் மேற்பட்ட திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் முதல்வராகி விட முடியவில்லை.

1977ல்- அவசர நிலையை எதிர்த்து 1980ல் 'நேருவின் மகளே வருக.... நிலையான ஆட்சி தருக'' என்கிற கோஷத்தோடு ஆதரித்த தி.மு.கவுக்கும், தற்போது பாரதிய ஜனதாவை ஆதரிக்கிற தி.மு.கவுக்கும் பெரிய வித்தியாசம் ஒன்றுமில்லை. கடைசியில் முத்தாய்ப்பாக கருணாநிதியின் ஒரு மேற்கோள். (முரசொலி - 96 சிறப்பு மலரிலிருந்து)

''ஏற்றுக் கொண்ட லட்சியத்துக்கு மாறாக இன்று ஒருவன் செயல்படுகிறான் என்றால் அவன் ஏற்கனவே அந்த லட்சியத்தில் பற்று இல்லாமல் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறான் என்பது தான் உண்மை.

**-இளைய பெருமாள்.**

## - வாசகர் சிந்தனை -

**இன்று நடந்து கொண்டிருக்கும் ஈழப்போர் முழு தேசத்தையும் அபகரித்து, மனிதர்களை மரணக் குழிக்குள் தள்ளி விட்டு வேடிக்கை பார்க்கின்றது. இதற்கு துணை போகும் நமது பாராளுமன்றத் தலைவர்களும் அரசியல் கட்சிகளும் நிச்சயம் பொறுப்பேற்க வேண்டும். இவ்வேளை சுதந்திரமாகவும் காத்திரமாகவும் குரலெழுப்ப இவ்வாறான பத்திரிகைகளின் தொடர் வருகை நிம்மதியைத் தருகின்றது.**

**அரசுக்கு கூஜா தூக்கிக் கொண்டு, அனேக ஊடகங்கள் வருகின்றன. ஊடகவியலில் சுதந்திரம் நசுக்கப்பட்டிருக்கும் இத் தருணத்தில் தமிழில் சுதந்திரமாய் வெளிவரும் சரிநிகர், புதிய சமதர்மம் போன்ற பத்திரிகைகளின் பணி பாராட்டத்தக்கதுதான்.**

- ஓட்டமாவடி அறபாத் -

www.padippakam.com





# சிங்கள கலைஞர்களுக்கு சோதனை



பொதுஜன முன்னணியை பதவியில் அமர்த்துவதற்கு பல்வேறு சக்திகள் பல்வேறு வழிகளில் செயற்பட்டன. பத்திரிகையாளர்கள், கலைஞர்கள், தொழிலாளர்கள், தமிழ், முஸ்லிம் மக்கள் என பல்வேறு பிரிவுகள் இதனுள் அடங்கும் இவ் அனைத்துப் பிரிவினரும் தாம் செய்தது தவறு என்றே உணர்கின்றனர். இதனாலேயே கடந்த ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன முன்னணிக்கு எதிராக செயற்பட்டனர்.

இன்று தென்னிலங்கையில் சிங்கள கலைஞர்கள் அச்சத்துடன் வாழும் நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. பிரபல சிங்கள திரைபட நடிகை அனோஜா வீரசிங்காவின் வீடு சாம்பலாக்கப்பட்டுள்ளது. கடந்த 22 வருடமாக இந்நடிகையினால் சேகரிக்கப்பட்ட அனைத்து பொருட்களும் சாம்பல் ஆகியுள்ளது. மேற்படி நடிகை யுத்தத்துக்கு எதிரான கிரேக்க கதை ஒன்றை மையமாக வைத்து தயாரிக்கப்படும் படத்தில் கதாநாயகியாக நடித்து வருகிறார். அக்கதையில் ஒரு அரசி தனது கணவனை, பிள்ளைகளை பறி கொடுப்பதுடன் தனது நாடு அழிவதையும் மனித உயிர்கள் பலியாவதையும் கண்டு மனம் வெதும்பும் நிலை காணப்படுகிறது. அந்த அரசியின் பாத்திரத்திலேயே அனோஜா வீரசிங்க நடித்துள்ளார். ஆனால் இன்று அனோஜாவின் வாழ்விலும் அழிவு கண் முன்னே தாண்டவமாடுகின்றது. அடுத்ததாக ருகுன்த சந்திரலேகா என்ற தம்பதிகளுக்கு எதிராகவும் தாக்குதல் தொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி தம்பதிகளின் வீடு நாசமாக்கப்பட்டுள்ளதுடன், அவர்களது தலைமுடியும் அபகரிக்கப்பட்டுள்ளது.

மறைந்த ரணசிங்க பிரேமதாசவின் கொடுங்கோலுக்கு எதிராக துணிந்து குரல் கொடுத்தவர் குணதாச கப்புகே என்ற சிங்கள பாடகர். பிரேமதாசா காலத்தில் கப்புகே பல்வேறு சோதனைகளுக்கு ஆளானார். 1994ல் சந்திரிகா அவர்களை ஜனாதிபதி ஆக்குவதற்கு கப்புகே பெரும்பிரயாத்தனம் செய்துள்ளார். கிட்டத்தட்ட 127 மேற்பட்ட பொதுக் கூட்டங்களில் சந்திரிகாவுக்கு ஆதரவாக பேசியுள்ளார். அங்ஙனம் செயற்பட்ட கப்புகே தான் செய்தது தவறு என்று இன்று மனம் வருந்துகின்றார். ஏனென்றால் பொது ஜன முன்னணிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையே தன்னால் வேறுபாட்டை காண முடியாது இருப்பதாக தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா அவர்களின் கணவர் விஜயகுமாரணதுங்க ஒரு பிரபல சிங்கள திரைப்பட நடிகராவார். மறைந்த விஜய குமாரதுங்கா அரசியலை விட கலையை மிக அதிகமாக நேசித்தவர், இனப்பிரச்சினையில் அக்காலப்பகுதியில் துணிந்து வடபகுதி சென்று விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டவர். விஜயகுமாரணதுங்க இவ்று உயிருடன் இருந்திருப்பாரானால் தற்போது நடைபெறும் துயரச் சம்பவங்களை பார்த்து பல போராட்டங்களை அவரே முன்னின்று நடத்தியிருப்பார்.

அரசுக்கு எதிராக செயற்படுகின்றவர்கள் பழிவாங்கல் என்பது இன்று சாதாரணமாகி விட்டது. அத்தகையவர்கள் படுகொலை செய்யப்படும் அளவுக்கு நிலைமை மோசமாகி உள்ளது. ''சட்டன'' பத்திரிகை ஆசிரியர் ரோகண குமார, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர், குமார் பொன்னம்பலம் ஆகியோரது கொலைகள் கிடப்பில் போடப்பட்டுள்ளது. நடிகை அனோஜா வீரசிங்க பாடகர்கள் ருகுன்த, சந்திரலேகா ஆகியோருக்கு இழைக்கப்பட்டுள்ள கொடுமைகளுக்கான விசாரணைகள் உருப்படியாக நடைபெற்றதாக தெரியவில்லை, மாறாக தனிப்பட்ட குரோதங்களே இத்தகைய சம்பவங்கள் நிகழ்வதற்கு காரணமாகும் என்ற போலியான செய்திகளை மக்கள் மத்தியில் திட்டமிட்டு பரப்பப்படுகின்றன.

அனோஜா வீராசிங்கா தனக்கு நிகழ்ந்த கொடுமைக்கு எதிராக குரல் கொடுக்க துணிந்துள்ளார். தனது நடிப்பு ஆற்றல் மூலம், தனக்கும் இந்த நாட்டுக்கும் புகழை தேடிக் கொடுப்பது தவறா? எனவும், ஏழை கிராமிய பிள்ளைகளுக்கு கலை பயிற்சி வழங்குவது குற்றமா? என்ற கேள்விகளை எழுப்பியுள்ளார். பெண்கள் தமக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு எதிராக குரல் கொடுக்காது போனால், நாய் கூட பெண்களை தாக்குதவற்கு துணிந்து விடும் என்று, பெண் சமூகத்திற்கு அறைகூவல் விடுத்துள்ளார். பொதுவாகவே தென் இலங்கை கலைஞர்கள் மத்தியில் பீதி நிலை காணப்படுகின்றது. பலர் மறைந்து வாழும் நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளனர். இந்த நாட்டிலேயே வாழ முடியாததாகி விட்டது என கவலை கொண்டுள்ளனர். கலைஞர்கள் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பவர்கள். அரசியல் சக்திகளைப் போல் இவர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதில்லை. மக்களின் ஆதரவே இவர்களுக்கு உள்ள ஒரு பாதுகாப்பாகும். இன்று தென் இலங்கையில் சட்டமும் ஒழுங்கும் உரிய முறையில் கவனிக்கப்படாத நிலை உள்ளது. எந்த இடத்தில் என்னசம்பவம் நிகழுமோ என்ற அச்சத்துடனேயே மக்கள் வாழ்கின்றனர். ஆட்சியில் இருப்பவர்கள் தமக்கு பெரும் அரண் அமைத்துக் கொண்டு செயற்படுகின்றனர். சாதாரண மக்களின் வாழ்வு கேள்விக் குறியாகியுள்ளது.

கலைஞர்களை பீதிகொள்ளச் செய்யும் சம்பவங்களுக்கு பரந்த அளவில் எதிர்ப்பு கொடுக்கப்படா விட்டால், ஏனைய பகுதிகளுக்கும், இத்தகைய துயர நிலை தோன்றுவதற்கு சந்தர்ப்பம் ஏற்படலாம். மீண்டும் பிரேமதாச யுகத்திற்கு இலங்கை பிரவேசிப்பதற்கு அதிக சந்தர்ப்பம் உள்ளது போலவே தெரிகிறது. நிச்சட் டி சொய்சாவுடன் ஆரம்பமாகிய யூ.என்.பி. வெறியாட்டம் 1994 வரை நீடித்தது. பல்வேறு சக்திகளின் ஒருங்கிணைப்பான செயற்பாட்டின் மூலமே யூ.என்.பியை தூக்கியெறிய முடிந்தது. அத்தகைய செயற்பாடு தற்போது மீண்டும் தேவைப்படத் தொடங்கியுள்ளது. இதன் அர்த்தம் மீண்டும் யூ.என்.பியை பதவியில் அமர்த்துவதற்காக அல்ல. இரண்டு சமூக விரோத கட்சிகளையும் எதிர் காலத்தில் என்றாலும் நிராகரிக்க வேண்டும் இங்கே நாம் குறிப்பிட்டது தென் இலங்கை சிங்கள கலைஞர்களுக்கு ஏற்பட்டுள்ள சோக நிலையை மட்டுமே. தமிழ் கலைஞர்கள் பற்றிய செய்தியோ இன்று இல்லாமலே போய் உள்ளது. கடந்த 20 வருடம் நடைபெறும் யுத்தத்தின் காரணத்தினால் தமிழ் கலைஞர்கள் சிதறி வாழும் சூழ்நிலை தோன்றியது. சிங்கள கலைஞர்களுக்கு இருந்த எத்தகைய வசதி வாய்ப்புக்களும், தமிழ் கலைஞர்களுக்கு வழங்கப்படவில்லை. தமிழ் கலைஞர்களுக்கு எதிரான கொடுமைகள் எப்பவோ நடக்கத் தொடங்கி இன்று வரை நடந்து கொண்டே இருக்கின்றது. தென் இலங்கையில் கலைஞர்களை கௌரவிக்கும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இவை அரசாங்கத்தினாலும், பொது நிறுவனங்களாலும், நடத்தப்படுகின்றன. இவை யாவற்றிலும் தமிழ் கலைஞர்கள் புறக்கணிக்கப்பட்டே வருகின்றனர். தமிழன் என்றால் புலி என்ற பார்வை தமிழ் கலைஞர்கள் அடங்கலாக உள்ளது. உலகிற்கு காட்டுவதற்காக சில தமிழ் கலைஞர்களை ஆங்காங்கே சில நிகழ்ச்சிகளில் தலை காட்ட இடமளிக்கப்படுவதுண்டு. இது முழு பூசினிக்காயை சோற்றில் மறைக்கும் முயற்சியாகும்.

தென் இலங்கையில் கலைஞர்களுக்கு எதிராக நடைபெறும் அநியாயங்களுக்கு அனைத்து சக்திகளும் ஒன்றிணைந்து குரல் கொடுக்கவேண்டும். இந்த நேரத்திலாவது தமிழ் கலைஞர்களின் நிலைமையை சிங்கள தென் இலங்கை கலைஞர்கள் உணர்வார்கள் என நம்பலாம். கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் சமூகம் படும் இன்னல்களும் துயரங்களும், தென் இலங்கை கலைஞர் மத்தியில் எதிர்காலத்தில் முழு அளவில் எடுபடும் என்றே நம்ப வேண்டும்.

## மூன்றாம் ஆயிரமாண்டு வருகையின் முகவாயிலில், முதல் நூற்றாண்டுக்கு முன்னுரை

மண்ணில் தோன்றிய
உயிரினங் களுக்குள்
மனித இனமே
புனித மென்றே......
சொன்னது எதனா
லென்றே தான்
சொல்லச் சான்றுக
ளுண்டோமோ?

சிந்திக் கின்ற
உயிரின மென்றால்
இந்த மனித
இனமொன் றேதான்...
என்றே எவனோ
எப்பொழுதோ
எங்கோ சொன்ன
ததனாலாம்!

சிந்திக் குமின
மோமனி தயினம்?
சீச்சீ! சொல்ல
ஐயோ! வெட்கம்....
நிந்தைக் குரிய
இனமன்றோ?
நித்தம் மனிதக்
கொலையன்றோ!

காட்டில் வேட்டை
யாடிய மனிதன்
கண்டி டாத
ஆம்! நா கரிகம்?....
நாட்டில் மனிதனை
ஆம்! மனிதன்
வேட்டு வைத்தே
கொலையன்றோ!

சொத்துப் பொதுவா
காதெங் குந்தான்
சுகமோ மனித
இனத்துக் கில்லை!....
சித்திர வதைகொலை
கொடுமைகளே....
சீலம் எனவே
ஆம்! தொடரே!

மதஇன இடமொழி
நிறபே தத்தால்
மனிதனைப் பகைவ
னாக மனிதன்.....
வதமே இன்று
ஆஆம்! எங்கும்!
அதமே தானோ?
இப் புவியே!

அதத்தின் பின்ன
ரிப்புவி மீள
ஆரம் பமாக
ஆதாம் ஏவாள்....
உதித்து வந்தே
விதைபோட
ஓரிரு கோடிவ
ருட மாமோ
குரங்கின மும்குன்
றிவர வாலே
கூர்ப்ப டைந்து
மனித னாகும்....
வரமும் பூஜ்யம்
என்பதனால்
மனித இனமில்
லா தாமோ?

போரா யுதமும்
யுத்தப் படையும்
பேரா பத்தே
இப்பு விக்கே...
தோரா விடிலோ
ஆம்! இன்றே!
தூர்ந்தே போகும்
மனித இனம்!
துடைத்தெறி யப்படும்
ஆம்! ஆம்! ஆம்!

கண்டி.எம்.ராமச்சந்திரன்

படிப்பகம்

www.padippakam.com



# பாஸ், பெர்மிட் நடைமுறையால் அடக்கு முறைக்குள்ளாகும் மட்டக்களப்பு மாவட்ட மக்கள்



வடக்கு கிழக்கிலும், தென்னிலங்கையிலும் மலையகத்திலும் வாழும் தமிழ் மக்கள் பயவுணர்வுடனும், கவலையுடனும் வாழ்கின்றார்கள். இன்று தமிழ் பேசும் மக்கள் அனுபவிக்கும் அவலங்கள் வரலாற்றில் காணாத அளவுக்கு கட்டுமீறி செல்கிறது. தொடரும் இனவாத அழிப்பு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர வேண்டும். என்ற நன்னோக்குடன் நோர்வேயின் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கும் வேளையில் அரசு இராணுவத்துக்கு கட்டாய ஆட்சேர்ப்பு வடக்கிழக்கில் ஆயிரக்கணக்கான இராணுவ குவிப்புகள், ஆயுத கொள்வனவு, யுத்த நடவடிக்கைகள் என்ற போர்வையில் அப்பாவி பொது மக்கள் மீதான படுகொலைகள் பாலியல் வல்லுறவுகள் கைதுகள் என்பன தமிழ் மக்கள் மத்தியில் பெரும் மன விரிசலை உண்டாக்கின்றது. தொடரும் யுத்தத்துக்கு, இரண்டாவது தடவை ஜனாதிபதி பதவியை ஏற்றிருக்கும் சந்திரிக்கா, சமாதானத்தை மேற்கொள்வார் என்ற எதிர்பார்ப்பு, பதவியேற்பின் அவர் ஆற்றிய உரையால் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியது.

தனது உரையை தொடர்ந்தாப் போல் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைமுறைக்கு வந்துள்ள பாஸ் முறை தமிழ் மக்களை மேலும் அடக்குமுறைகள் கொண்டு செல்வதை உணரமுடிகிறது. நொந்து போயுள்ள தமிழ் மக்களுக்கு மேலும் வேதனை தரக்கூடிய சம்பவமாகவே அமைந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு, செல்வதற்கு புதிய பாதுகாப்பு நடைமுறைகள் பெப்ரவரி 15ம் திகதி முதல் அமுலுக்கு கொண்டுவரப்படவுள்ளன என்று மட்டக்களப்பு மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சர் மட்டு அரச அதிபருக்கு அறிவித்தார். பாதுகாப்பு தொடர்பாக மேற்கொண்டுவரும் இந்த நடவடிக்கையானது மட்டக்களப்பு மாவட்டத்தை வன்னியாக மாற்றும் செயலாகும். ஏற்கனவே யாழ் மாவட்டமும் வன்னி மாவட்டமும் பாதுகாப்பு நடவடிக்கையாக நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து பிரிக்கப்பட்டது போன்ற நடைமுறைகள் இருந்தது. யாழ் மாவட்டத்தில் பாதுகாப்பு தரப்பினரால் வழங்கப்பட்ட அட்டையும் வன்னி மாவட்டம் இராணுவ கட்டுப்பாடு பகுதி இராணுவ கட்டுப்பாடு அற்ற பகுதி என இரு பகுதிகளாக பிரிக்கப்பட்டு பாஸ் முறை நடைமுறையில் உள்ளது. இந்த வகையில் இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைமுறைக்கு வந்துள்ள இந்த பாஸ் முறைக்கு அப்பகுதி மக்கள் எப்படி முகம் கொடுக்கப்போகிறார்கள் இதுவரை மட்டக்களப்பு மாவட்ட மக்கள் தமது தேவைகளுக்காக தென்பகுதி நோக்கி பயணம் செய்யும் போது பல்வேறு வகையான சோதனைகளும் கெடுபிடிகளும் தீவிர விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டது. கால வீண்விரயத்துக்கு மத்தியில் இந்த பயணத்தை மேற்கொண்டனர் ஆனால் இன்று நடைமுறைக்கு வரவுள்ள பாஸ் நடைமுறை மேலும் துயரத்தையே கொண்டுவரும்.

இவ்வாறு வன்னி, யாழ் என ஆரம்பித்த பாதுகாப்பு அழுத்தங்கள் தற்போது மட்டக்களப்பு மாவட்டத்துக்கும் கொண்டு வரப்பட்டுள்ளதானது வடக்கு கிழக்கை நாட்டின் தென்பகுதியில் இருந்து, துண்டித்து விடுவதாகவே அமையும். பாதுகாப்பு என்று மேற்கொள்ளும் நடவடிக்கை மக்களை சொல்லொண்ணாத் துயரத்துக்குள் கொண்டு செல்லும்.

ஏற்கனவே வவுனியா மாவட்டத்தில் இருக்கும் நடைமுறையினால் மக்கள் படுகின்ற துன்பங்கள் சொல்லித் தீராதவை இந்த நடைமுறைகளுக்காக தங்கள் நேரங்களை செலவு செய்வதில் இவர்கள் பொழுது விடிந்து அவசர வைத்திய சிகிச்சை வெளிநாட்டு பயணம், சிறை கைதிகளை பார்வையிட செல்வதற்கு போன்ற அவசர தேவைகளை நிறைவேற்றுவதற்கு பாஸ் பாஸ் என பரிதவித்து படிகட்டுகளில் ஏறி இறங்கும் அவல நிலையில் இன்று வன்னி மக்கள் உள்ளனர். இந்த அவலம் நெஞ்சில் நிழலாடுகையில் மட்டக்களப்பிலும் இதனை நடைமுறைபடுத்த நினைப்பது தமிழ் பேசும் மக்களை மேலும் மேலும் அடக்கு முறைக்கு உட்படுத்தும் செயல்பாடு ஆகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 12 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 4 பிரிவுகள் இராணுவ கட்டுப்பாடற்ற பிரதேசமாக இருந்து வருவது குறிப்பிட்டத்தக்கதாகும். இம்மாவட்டத்தில் 508731 மக்கள் வாழ்கிறார்கள் இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசத்தில் 3 லட்சத்துக்கு குறைந்தோரும் கட்டுப்பாடில்லாத பிரதேசத்தில் 1 1/2 லட்சம் பேரும் வாழ்கிறார்கள்.

இராணுவ கட்டுப்பாட்டில்லாத பிரதேசங்களில் உள்ளவர்கள் வெளிமாவட்டத்துக்கு செல்லும் போது ஒவ்வொரு தடவையும் பிரயாண அனுமதி பத்திரம் பெற வேண்டும் என்ற நடைமுறை அங்குள்ள மக்களை மேலும் தொல்லைக் குள்ளாகிறது. இராணுவ கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் மக்கள் 90% சதவீதமான நெல் வயல் தொழிலாளரையும் கால் நடைவளர்ப்பு விறகு பொறுக்குதல் போன்ற தொழில்களிலே ஈடுபடுகின்றனர். 80 சதவீதமான மக்கள் வறுமை கோட்டிலே வாழ்கின்றார்கள்.

வறுமைக் கோட்டில் வாழ்கின்ற மக்கள் தொழில் நிமித்தம் அம்பாறை, பொலனறுவை திருமலை மாவட்டங்களிலுள்ள அரிசி ஆலை கூலித் தொழிலாளர்களாகவும் இராணுவ கட்டுப்பாடில்லாத பிரதேசங்களிலே அதிகளவு தொழில் செய்கின்றனர். இவர்கள் வெளியிடங்களுக்கு செல்வதற்கு ஒவ்வொரு தடவையும் அனுமதிப் பத்திரம் பெற்று பிரயாணம் செய்ய வேண்டுமென்ற நடைமுறை இவர்களை பெரிதும் பாதிக்கப் போகிறது. இந்த பாஸ் நடைமுறையால் மிகவும் பாதிக்கப்படுபவர்கள் வறிய அப்பாவி பொதுமக்களே.

இதேபோல் மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள பெர்மிட் நடைமுறையால் இப்பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதை நீக்குமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் பாதுகாப்பு பிரிவினரோ அரசாங்கமோ கண்டும் காணாத நிலையில் உள்ளன. கிருமி நாசினி தவிர்ந்த ஏனைய பொருட்கள் எடுத்து செல்வதற்கு கட்டுப்பாடு உள்ளது. பசளை, விதை நெல், பற்றரி மண்ணெண்ணெய் முட்கம்பி உணவுப்பண்டங்கள் எடுத்து செல்லவும், விளைந்த நெல்லை எடுத்து பெர்மிட் பெற வேண்டும் இந்த நடவடிக்கையும் இராணுவ கட்டுப்பாடற்ற பகுதி மக்களை மேலும் துயரத்துக்கே இட்டு செல்கிறது. இனப்பிரச்சினையை மையமாக வைத்து தமிழ் மக்களை இன்னல்களுக்கு ஆளாக்குவதைத் தவிர்த்து இதய சுத்தியுடன் செயல்படுவது அரசின் கடமையாகும்.

பாஸ் பெர்மிட் நடவடிக்கை யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரவோ, இனப் பிரச்சினையை தீர்க்கவோ உதவாது. மாறாக வட கிழக்கு பிரதேசத்தையும் அங்கு வாழும் மக்களையும் இந்த நாட்டில் இருந்து நாமே பிரிப்பதாகவே அமையும்.

இரண்டாம் பக்கத் தொடர்ச்சி...

## உலகெல்லாம்....

நரகத்தை விட மோசமான இந்த முகாமில் இவர்கள் கடந்த ஏழு வருஷங்களாக வைக்கப்பட்டுள்ளார்கள். தமிழ் நாட்டிலுள்ள இரக்கம், அன்பு, எல்லாம் வற்றிவிட்டதோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

ஹிட்லர், முகிலன், அஜந்தன், ராதா, உதயசூரியன், மொஸ்கோ, நிமலன், சிவா, குமார், ஜெரி, மூர்த்தி, நகுலன், ஜீவன், யோகன், சங்கர், கலராணி, குமார், கௌதமி ஆகியோர் கையின்றிக், காலின்றி, இடுப்புக்குக்கீழ் இயக்கமின்றி பல்வேறு வகைகளில் ஊனமிழந்துள்ளனர். இத்தகையவர்களினால் இந்தியாவின் பாதுகாப்பு அச்சுறுத்தப்படும் என்பது ஒரு வெட்கக்கேடான விஷயம்; ஆனால் இதையே அரசாங்கம் சொல்லுகிறது.

அசைய முடியாமல் இவர்கள் படுக்கையிலே உள்ளனர். ஆயினும் இவர்கள் தப்பி ஓடிவிடுவார்களோ என்ற அச்சத்தில் துப்பாக்கியுடன் காவல்படை எந்நேரமும் காவல் காத்து நிற்கிறது.

அண்மையில் இவ்விளைஞர்கள் தமிழ் நாட்டு முதலமைச்சருக்கு ஒரு குறிப்பு அனுப்பியுள்ளனர். அதில் 'நாங்கள் எங்கள் தாய் நாடாகிய தமிழ் ஈழத்துக்குப் போக விரும்புகிறோம். எங்களை செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் எங்கள் தாய் நாட்டுக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறோம். நாங்கள் தமிழ்நாட்டில் எந்தக் குற்றமும் செய்யவில்லை. ஆனால் இச்சிறைச்சாலைகளில் கடந்த ஏழு வருஷங்களாக வேதனையுடன் வாழ்ந்து வருகிறோம், தயவு செய்து இந்தச் சித்திரவதையிலிருந்து எங்களை விடுவித்து எங்கள் உற்றார், உறவுகளுடன் போய்ச் சேர்வதற்கு ஆவன செய்யும்படி தாழ்மையாக வேண்டுகிறோம்' எனக் கூறியுள்ளனர்.

இவர்களை விட பெருந்தொகையான இளைஞர்கள் ஆண்களும், பெண்களும் சிறப்பு முகாம்களில் இருக்கின்றனர். இவர்களின் மேல் எந்தக் குற்றச் சாட்டுமில்லை. ஆனால் புலிகள் எனச் சந்தேகிக்கப்படுகின்றனர். பொய்யான வழக்குகளில் கைதாகிப் பின்னர் குற்றமற்றவர் என விடுவிக்கப்பட்டவர்களும் சுதந்திரமாகத் திரிய முடிவதில்லை. அவர்கள் மீண்டும் கைதாகி சிறப்பு முகாம்களில் வைக்கப்படுவார்கள். இன்றும் சிறப்பு முகாம்களிலேயே வைக்கப்பட்டுள்ளனர்.

ஈழத்தமிழர் மீதுத காவல்படை காட்டும் இரக்கமற்ற போக்கைக் காட்டுவதற்கு திரு. இராமேஸ்வரன் என்பவருடைய உதாரணம் சிறப்புடையது. யாழ்ப்பாணத்தில் இசை ஆசிரியராக இருந்த திரு.இராமேஸ்வரன் தமிழ் இசையைப் பற்றி மேலும் பயில்வதற்கு தமிழ் நாட்டுக்கு வந்தார். தமிழ்ப்புலி எனக் கைது செய்யப்பட்டு சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டார். அவர் விடுதலையாக்கப்படவில்லை.

இவ்வுதாரணங்கள் எல்லாம் ஒரு பனிப் பாறையின் நுனியாகும், எத்தனையோ மனித உரிமைகள், அகதி உரிமைகள் எல்லாம் கவனிப்பாரற்று மீறப்பட்டு வருகின்றன. தவறு செய்யும் அரசாங்கங்களை மனித உரிமைகள், அகதி உரிமைகள் விதிகளை, சட்டங்களைக் கடைப்பிடிக்கும் வண்ணம் அழுத்தம் கொடுப்பது சர்வதேச சமூகம், நிர்வாகங்கள் ஆகியவற்றின் கடப்பாடாகும் ''ஐ.நா சாசன பிரகடனத்தில் அகதிகள்'' என்ற கோட்பாட்டுக்கு அமைய இந்திய, தமிழ் நாட்டு அரசுகள் ஈழத் தமிழ் அகதிகளைப் பிரகடனப்படுத்த வேண்டும் என சர்வதேச சமூகம் அழுத்தம் கொண்டு வரவேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com






# அவர்கள் உணர்கிறார்கள்

- அமுதா -

மாலை வேளையில் காக்கைதீவுக் கடற்கரை, சனங்களின் வருகையால் நிறைந்து காணப்பட்டது. அன்று ஞாயிற்றுக் கிழமை என்பதால் கொழும்பின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த மக்கள் கூட்டத்தால், கடற்கரை கலகலப் படைந்தது. நீட்டா ஜோனின் அகால மரணத்தால் அந்தக் கடற்கரையில் கொஞ்சக் காலம் சன நடமாட்டமே இல்லாதிருந்தது. பழையவற்றை மறக்கும் சுபாவம் எம் மக்கள் மத்தியில் மலிந்து காணப்படுவதால், நீட்டா ஜோனின் விடயம் மறக்கப்பட்டு மீண்டும் அந்தக் கடற்கரை மக்களால் நிரம்பி வழிந்தது. சிவசம்பு மாஸ்டரும் தனது பொழுதைக் கழிப்பதற்காக கடற்கரையில் ஒரு கரையில் அமர்ந்திருந்தார். சிவசம்பு மாஸ்ட்டர் கொழும்பு வந்து மூன்று மாதங்கள் ஆகின்றன. மாஸ்டர் தனி வீட்டிற்கு வந்து ஒரு மாதந்தான் ஆகின்றது. கொழும்பைப் பற்றி தான் எவ்வளவு பிழையாக எடை போட்டதை யிட்டு தனக்குள் மாஸ்டர் நொந்து கொண்டார். இங்கு சனங்கள் எவ்வளவு மகிழ்ச்சியாக வாழ்கின்றனர். பணம் இருந்தால் எத்தகைய வசதிகளையும் தருவித்துக் கொள்வதற்கு வாய்ப்புகள் உண்டு. வெறுமனே பத்திரிகைகளைப் பார்த்தும் ஆட்கள் சொல்லும் கதைகளைக் கேட்டும் கொழும்பைப் பற்றி எவ்வளவு பிழையாக எடைபோட்டிருந்தேன் என மீண்டும் தன்னை மனதுக்குள் சபித்துக் கொண்டார்.

சிவசம்பு மாஸ்டர் யாழ்ப்பாணம் கோப்பாயில் சகல வசதிகளுடனும் வாழ்ந்து வந்தவர். மாஸ்டரின் மனைவி செல்லமுத்துவும் ஒரு ஆசிரியை. இவர்களுக்கு மூன்று ஆண்பிள்ளைகளும் செல்வி என்கின்ற ஒரு பெண் பிள்ளையும் உண்டு. நாட்டுப் பிரச்சினை காரணமாக மூன்று ஆண்பிள்ளைகளையும் மாஸ்டர் கனடாவுக்கு அனுப்பி விட்டார். கடைக்குட்டியான செல்வியை தங்களுடன் வைத்துக் கொண்டார். மாஸ்டரின் குடும்பம் வெளிநாட்டுக்கு பணம் உழைக்க போக வேண்டும் என்ற நிலையில் இருக்க வில்லை. ஆசிரிய தம்பதிகளின் வேதனமும் குடும்பச் சொத்தும் பலதலைமுறைக்கு காணக்கூடியதாக இருந்தது.

பொதுவாகவே யாழ் சமூகம் கல்விக்கு அதிக மதிப்பளிப்பது வழக்கமாகும். இந்த வகையில் மாஸ்டர் சிவசம்புக்கு அவர் வாழ்ந்த கோப்பாய் பகுதியில் பெரும் மதிப்பு நிலவியது. கோவில், பாடசாலை, மயானசபை போன்ற பல்வேறு அமைப்புக்களில் மாஸ்டருக்கு கௌரவத்துக்காக ஏதாவது ஒரு பதவி வழங்கப்பட்டு வந்தது. ஆனாலும் மாஸ்டர் தனது பாடசாலை அபிவிருத்தியிலேயே அதிக கவனம் காட்டி வந்தார். பாடசாலை நேரம் போக மீதி நேரங்களில் பாடசாலையில் வைத்தே வசதியற்ற பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பதை வழக்கமாக வைத்திருந்தார். தனியார் கல்வி நிறுவனங்கள் கொடிகட்டிப் பறக்கும் இக்காலத்தில் மாஸ்டரின் செயற்பாடுகள் கல்வியை விற்பவர்களின் வயிற்றில் புளியைக் கரைத்தது. இதனால் பல்வேறுபட்ட சோதனைகளுக்கு சிவசம்பர் முகம் கொடுக்க வேண்டி இருந்தது. ஆனாலும் சிறிமான் பொது சனம் மாஸ்டரின் சேவையை ஜீரணித்திருந்ததால் இத்தகைய எதிர்ப்புக்கள் யாவும் தூசு போல் கலைந்து போயின.

பிறர் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும் என்ற நம்பிக்கை மாஸ்டருக்கு இருந்து வந்தது. இதனால் தனது பிள்ளைகளின் கல்வியில் இவர் அதிகம் ஆர்வம் காட்டவில்லை பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் யாவற்றுக்கும் செல்லமுத்துவே பொறுப்பாக இருந்தார். உள்நாட்டு யுத்தநிலை, இளைஞர்களின் எழுச்சி என்பவற்றின் தாக்கங்களினால் மாஸ்டரின் ஆண் பிள்ளைகளின் கல்வி பெரிய விளைவை ஏற்படுத்தவில்லை. செல்லமுத்துவின் தம்பியார் மதன் பல்வேறு இளைஞர் நடவடிக்கைகளில் ஈடுபட்டு பின்பு தனது உயிர்பாதுகாப்புக்காக கொழும்பில் சரணடைந்தார். பின்பு மதன் கொழும்பில் தனது அரசியல் சிந்தனைக்கு முழுக்குப் போட்டுவிட்டு, பணம் உழைப்பதில் நாட்டம் கொண்டார். மதனுக்கு தற்போது இரண்டு கொமினிக்கேசன் நிலையங்கள் உண்டு அத்துடன் வெளிநாட்டுக்கு ஆட்களை அனுப்பும் உபமுகவராக இருந்தார்.

1987 காலப்பகுதியில் இந்தியப் படையினர் வருகையால் காணாமல் போதல் கைது செய்யப்படுதல் என்பனவற்றால் பலதமிழ் குடும்பங்கள் கலக்கம் அடைந்தன. இதனால் பலர் தமது பிள்ளைகளை பாதுகாப்பிற்காக வெளிநாட்டுக்கு அனுப்பும் துன்பச் சுழியில் சிக்குண்டனர். ஊருக்குள் பிள்ளைகளின் பாதுகாப்பிற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலாலும், மதனின் செல்வாக்காலும் மாஸ்டரின் லட்சியம் பின் தள்ளப்பட்டு செல்லமுத்துவின் விருப்பம் நிறைவேறியது. இதனால் மாஸ்டர் சிவசம்புவின் பிள்ளைகள் ஒவ்வொருவராக கனடா மண்ணில் அடைக்கலம் புகுந்தனர். ஆனாலும் சிவசம்பர் தனது கடைக்குட்டி செல்வியை தனது சிந்தனைக்கு அமைவாக வளர்ப்பதில் உறுதியாக இருந்தார். அதில் வெற்றியும் கண்டார். செல்வி ஒரு விஞ்ஞான பட்டதாரி ஆகி உள்ளாள். மாஸ்டர் தம்பதிகள் சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ளனர்.

அண்மைக்காலமாக யாழ் குடாநாட்டில் நிகழும் பாலியல் தொல்லைகள் சிவசம்பர் குடுபத்தை அச்சத்துக்குள்ளாக்கியது. செல்வி மீது சீருடையினர் விடும் சேட்டைகளும் மாஸ்டர் குடும்பத்துக்கு பயத்தைக் கொடுத்தது. கனடாவில் இருக்கும் பிள்ளைகள் தொடர்ந்தும் இவர்களை கொழும்புக்கு வருமாறு நச்சரித்துக் கொண்டிருந்தனர். இறுதியாக புங்குடுதீவு குருக்களின் மகள் சாரதாம்பாளுக்கு நிகழ்ந்த அனர்த்தத்தால் மாஸ்டர் குடும்பம் கொழும்புக்கு பறந்து வந்தது.

கடற்கரையில் சனங்கள் மெதுவாக குறையத் தொடங்க சிவசம்பரும் வீட்டுக்குப் போக நடக்கத் தொடங்கினார். வீட்டுக் கதவின் அழைப்பு மணியை அமுக்கியபோது கதவைத் திறந்த செல்வி ''ஏனப்பா எங்களையும் கூட்டிக் கொண்டு போயிருக்கலாமே. நானும் அம்மாவும் அடைபட்டுக் கிடக்கிறோம். ஊரில் என்றால் வளவுக்குள் என்றாலும் உலாவலாம் இங்கு ஒன்றும் செய்ய முடியாது'' என செல்லமாக கடிந்தாள். நாளைக்கு நாங்கள் எல்லோரும் கடற்கரைக்கு போவோம் என்று மகள் செல்வியை சமாதானப்படுத்தினார் சிவசம்பர். உள்ளே இருந்த செல்லமுத்து அந்நிய ஊரிலே நாம் கண்டபடி திரியக் கூடாது. ஊரிலே என்றாலும் ஒன்று நடந்தால் நான் நீ என்று இனசனம் ஓடி வரும். இங்கு வருவதற்கு யாரும் இல்லை என்று செல்லமுத்து சொன்னபோது செல்வி ''ஏனம்மா மாமா இருக்கிறார் தானே'' என்று குறும்பாகச் சொன்னாள். 'போ அங்காலே என்று மகளை கோபித்த' செல்லமுத்து, நீங்களும் இப்படித் தனியாய் போய் வருவதை குறையுங்கள் என்றும் சிவசம்பருக்குக் கூறினாள். சிவசம்பர் சிரித்தபடியே செல்லமுத்து நானும் யாழ்ப்பாணத்தில் இருந்த போது உன்னை போலத்தான் இருந்தனான். இங்கு வந்த பின்புதான் நாங்கள் கிணற்றுத் தவளை என்று புரிகிறது. நீ உன் நிழலைக் கண்டு பயப்படுகிறநீ. செல்விக்கும் உன்ர பழக்கத்தைப் பழக்காதே என்றார். நீங்களும் குழந்தைப் பிள்ளை போல் மாறிவிட்டீர்கள். எல்லாம் கலிகாலம்தான் என்றா செல்லமுத்து. நீங்கள் இரண்டு பேரும் புடுங்குப்படுவதை இங்குவந்த பின்பு என்றாலும் நிறுத்துவீங்கள் என்று பார்த்தேன். ஆனால் நீங்கள் திருந்தமாட்டீர்கள் பெரிய அண்ணன்ட கோல் வரட்டுக்கும் எல்லாத்தயும் சொல்கிறேன் என்றாள் செல்வி. இப்ப உனக்கேன் கோவம் வந்தது செல்வி என்று கேட்டார் மாஸ்டர். ஏதேனும் படக்கொப்பி இன்றைக்கும் வேண்டி வரட்டா என்று கேட்டார் சிவசம்பர். தலை குனிந்த செல்வி மெல்லிய குரலில் 'சேது' படம் வாங்கி வரும்படி கூறினாள். உதுக்கே முகத்தை உவளத்திற்கு சுருக்கிக் கொண்டிருந்தனி என்று சிரித்துக் கொண்ட மாஸ்டர் வீடியோ கடைக்குச் சென்றார். இது பிடிக்காத செல்லமுத்து செல்வி நீயொரு பட்டதாரி உனக்கும் உலக நடப்பு விளங்க வேண்டும். இந்த இருட்டில அவரையேன் போகச் சொன்னனி என்று கோபித்தாள். அம்மா இருட்டும் வெளிச்சமும் கோப்பாயில்தான். இது கொழும்பு. இங்கு இரவு பகல் வித்தியாசம் இல்லை என்றாள் செல்வி. செல்லமுத்துவுக்கு கோபம் தலைக்கேறியது. பிள்ளை எல்லாம் ஒருக்கால் வந்தால்தான் தெரியும் என்று கூறிக் கொண்டு குசினிக்குள் புகுந்துவிட்டா. அந்த நேரம் மாஸ்டரும் படக்கொப்பியுடன் வந்து சேர்ந்தார். எல்லோரும் இரவு உணவை அருந்திய பின் படம் பார்த்தனர். சிவசம்பருக்கும் செல்லமுத்துவுக்கும் படம் தொடர்ச்சியாக இருந்து பார்க்க முடியவில்லை. செல்வி இருவரையும் உற்சாகபடித்தியபடி படத்தைப் பார்த்து முடித்தாள். அவர்கள் எல்லோரும் அன்று நித்திரைக்குச் சென்றனர்.

இரவு ஒரு மணிக்கு கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. விழித்தெழுந்த சிவசம்பர் கதவைத் திறந்தார். திடும்திடுமென உள்ளே நுழைந்த பொலிஸாரும் இராணுவத்தினரும் எத்தனை பேர் இருக்கிறீர்கள் என கேட்டனர். மூன்று பேர் என்று சொன்னதும் எப்போது இங்கே வந்தனீங்கள் என பொலிஸார் கேட்டனர். ஒரு மாதம் ஆகிறது என்று சிவசம்பர் கூறிய போது செல்வியை தம்முடன் அழைத்துச் சென்றனர். நாய்கள் குரைக்கும் சத்தம், வாகனங்களின் இரைச்சல் ஓசை, சப்பாத்துச் சத்தங்கள், செல்வியின் பிரிவு, இவையாவற்றாலும் சிவசம்பரும் செல்ல முத்துவும் உறைந்து போயிருந்தனர். ரெலிபோன் மணி அடிக்கும் ஓசையே இவர்களை பழைய நிலைமைக்குக் கொண்டு வந்தது. மாஸ்டர்தான் ஓடிப்போய் ரெலிபோனை எடுத்தார். மறுமுனையில் மதன். அத்தான் ஏதாவது பிரச்சினையா என்று கேட்டார். இல்லை மதன் செல்வியை பொலிஸார் கூட்டிக் கொண்டு போய்விட்டார்கள் என்று கூறிய மாஸ்டர். அழுதே விட்டார். அப்போது செல்லமுத்துவின் விம்மல் சத்தமும் அங்கே கேட்டது. அத்தான் ஊரடங்குச் சட்டம் போட்டிருக்கிறார்கள் விடிய நான் அவளை எப்படியும் கொண்டு வருவேன் என்று கூறிய மதன் ரெலிபோனை வைத்து விட்டார்.

மாஸ்டர் தம்பதிகள் விடியும் வரை ஒருவரோடு ஒருவர் பேசாது திகைத்த நிலையில் இருந்தனர். விடிந்தவுடன் மதன் தனது வானுடன் வந்து மாஸ்டரையும் செல்லமுத்துவையும் பொலிஸ் நிலையத்துக்கு கூட்டிச் சென்றார். பொலிஸ் நிலையத்துக்கு வெளியே சனக் கூட்டம் திரண்டு காணப்பட்டது. அனேகமானோர் கவலை தோய்ந்த முகத்துடன் காணப்பட்டனர். சிலர் அழுது கொண்டும் நின்றனர். பெரும் பயத்துடன் உள்ளே சென்ற இவர்களை செல்வி கண்டவுடன் ஓ! என கதறி அழத் தொடங்கினாள். செல்லமுத்துவும் சத்தம் இட்டு அழத் தொடங்கினா. பொலிஸார் விசாரணை முடிந்தவுடன் விடுவோம் என்று கூறியபடி எல்லோரையும் வெளியேறுமாறு கூறினர். மதனும் பல இடங்களுக்கு பல வழிகளைக் கையாண்டு முயற்சிகளை மேற்கொண்டார். மதியம் இரண்டு மணிவரை மதனின் முயற்சி வெற்றியளிக்கவில்லை. இதே வேளை கைது செய்யப்பட்டவர்கள் இயற்கை கடனை கழிப்பதற்கு கூட அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. தண்ணீர் கூட வழங்கப்படவில்லை மூன்று மணியளவில் முகம் மறைக்கப்பட்ட ஒரு மனித உருவத்தின் முன் எல்லோரும் நிறுத்தப்பட்டனர். செல்வி நிறுத்தப்பட்ட போது அந்த உருவம் தலையை ஆட்டிவிட்டது. தலை ஆட்டப்பட்ட பல பேர் வாகனங்களில் ஏற்றப்பட்டு நீதிமன்றம் கொண்டு செல்லப்பட்டனர். நீதிமன்றத்தில் பதினான்கு நாள் தடுத்து வைத்திருக்கும்படி உத்தரவு போடப்பட்டது. இக்காலத்தில் இலங்கையின் 52வது சுதந்திர திடம் மிகக் கட்டுப்பாட்டுடன் நடந்து முடிந்தது. பதினான்கு நாட்களின் பின் செல்வி நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டாள். சிவசம்பரும் செல்லமுத்துவும் இந்தப் பதினான்கு நாட்களுக்குள் ஓடாகி போனார்கள். செல்வியும் சருகாகி வீடு வந்தாள்.

மதன் செல்வியை வெளியில் எடுப்பதற்கு ஓடியாடி அலுவல் பார்த்ததில் ஒரு முப்பது ஆயிரம் ரூபாய் செலவாகியது. ஒன்றுமே செய்யாத அப்பாவி பட்டதாரி பெண்ணொருவர் கைது செய்யப்பட்டு குற்றமற்றவர் என விடுதலையான போதும், ஒரு தமிழ் குடும்பம் முப்பது ஆயிரம் ரூபாவுக்கு மேல் செலவு செய்ய வேண்டிய நிலை இந்த நாட்டில் உள்ளது.

அன்று ஒரு ஞாயிற்றுக் கிழமை பத்திரிகையைப் பார்த்த சிவசம்பர் துள்ளிக் குதித்தார் கைது செய்யப்பட்ட சக மாணவனை விடுதலை செய்யுமாறு கோரி குடாநாட்டு மாணவர்கள் நடத்திய போராட்டம் வெற்றி பெற்றதை பற்றிய செய்தியே மாஸ்டரின் மகிழ்ச்சிக்கு காரணமாக அமைந்தது.

வழமைக்கு மாறாக மூவரும் அன்று மாலை கடற்கரைக்குச் சென்றனர். கடற்கரையில் அமர்ந்திருந்த மூவரும் ஆரம்பத்தில் ஒருவருடன் ஒருவர் ஒரு சில வார்த்தைகளைப் பேசினாலும் பின்பு தம்பாட்டில் யோசிக்கத் தொடங்கிவிட்டனர். வெகு நேரம் கழித்து சிவசம்பர் உறுதியான குரலில் நாங்கள் யாழ்ப்பாணம் போவோம் என்றார். ஓம்! அப்பா ஓம்! என்றனர் மகளும் தாயும். அந்த முடிவில் ஆயிரம் அர்த்தங்கள் பொதிந்திருந்தன.

படிப்பகம்

www.padippakam.com





# தோட்டத் தொழிலாளருக்கு சமவுரிமை வழங்கப்படுமா?

இலங்கையின் ஏனையதுறை தொழிலாளர்களுடன் ஒப்பிடும்போது, பெருந்தோட்டத்துறையில் உள்ள தொழிலாளர்களுக்கு பாரபட்சமான முறையிலேயே வேதனம் தொடக்கம் ஏனைய சலுகைகள் வழங்கப்படுகின்றன. வாக்குரிமை உடைய இந்த நாட்டு பிரசைகளாக மலையக தொழிலாளர் இருந்த போதும் அரசு மாற்றான்தாய் மனப்பான்மையுடனேயே நடக்கின்றது. 1998ல் மேற் கொள்ளப்பட்ட ஒப்பந்தம் 1999 டிசம்பருடன் முடிவு அடைகின்றது. தற்போது புதிய ஒப்பந்தம் உருவாக்கப்பட்டு இருந்திருக்க வேண்டும். தமது கோரிக்கைகளை வலியுறுத்தி தோட்டத் தொழிலாளர்கள் களத்தில் இறங்குவதற்கு ஆயத்தம் ஆகின்றனர்.

தோட்டத் தொழிலாளர்களின் நியாயமான, நீதியான போராட்டங்கள் யாவும் அவர்களின் அரசியல் தலைமைகளின் காட்டிக் கொடுப்பினால் பல சமயங்களில் ஏமாற்றத்துக்கு உள்ளாவதும் உண்டு. தோட்டத் தொழிலாளர்களின் தலைமைகள், தோட்டத் தொழிலாளர்களின் போராட்டங்களை, தமது சொந்த வளர்ச்சிக்கு பேரம் பேசுவதற்கு பயன்படுத்தி வந்துள்ளனர். இதனால் மலையகப் பகுதியில் சலுகைகளை அனுபவிக்கும் சிறு கூட்டம் ஒன்று உருவாகியுள்ளது. இதேவேளை சாதாரண மலையக தொழிலாளியின் நிலையில், எத்தகைய மாற்றமும் ஏற்படவில்லை.

புத்தாயிரம் ஆண்டில் உலகம் காலடி எடுத்து வைத்துள்ளது. ஆனால் மலையகப் பகுதியில் அதே தோட்ட லயன்கள் போக்குவரத்து வசதிகள் இன்மை, சுகாதார வசதிகள் அறவே இல்லாத நிலை, ஒருவேளை உணவுக்கே போதாத சம்பளம், இவை போன்ற அனைத்து காரணிகளும் இம்மக்களை தொடர்ந்து வருத்தி வருகின்றன.

முன்னரைப் போல் அல்லாது தோட்டத் துறையில் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த மாற்றங்கள், சாதாரண தோட்டத் தொழிலாளர்களுக்கு வசந்தத்தை கொடுக்கவில்லை. மாறாக, மேலும், அவர்களை ஆதாள பாதாழத்துக்கு தள்ளியுள்ளது. தோட்டங்கள் பல மிக வேகமாகத் தனியார் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டன. பொறுப்பேற்ற தனியார் கம்பனிகள் முதலில் செய்த வேலை ஆட்குறைப்பு நடவைடிக்கைகளை மேற் கொண்டமை ஆகும். முன்பு தோட்டத் தொழிலாளர்களின் குடும்பங்களில் பலர் வேலை செய்யக் கூடிய நிலை இருந்தது. தற்போது பலர் வேலையற்று இருக்கும் நிலை உள்ளது.

தனியார் கம்பனிகள் தோட்டமக்களின் பொது வசதிகளை குறைப்பதில் அதிக அக்கறை செலுத்தி வருகின்றன. லாபமே கண்ணாக இருக்கும் இக்கம்பனிகள், ஈன இரக்கமற்ற நிலையில் தொழிலாளரை சுரண்டுவதில் குறியாக இருக்கின்றன. பெருந்தோட்டப் பகுதியில் இருந்த பெரிய மரங்களை கூட பல காரணங்களை கூறி அழிக்கும் நடவடிக்கைகளிலும், ஈடுபடுகின்றன. இதனால் சம்பந்தப்பட்ட கம்பனிக்கு பணரீதியான இலாபம் கிடைக்கும். அப்பகுதியில் இருக்கும், தோட்டத் தொழிலாளர்களில் சூழல் பெருமளவில் பாதிக்கப்படுகிறது.

மலையக மக்கள் முன் எப்போதும் இல்லாததை விட தற்போது பாதுகாப்பு கெடுபிடிகளுக்கு உள்ளாகின்றார்கள். மலையக இளைஞர்கள் பலர் பல்வேறு தடுப்பு நிலையங்களில் விசாரணை இன்றி தடுத்து வைக்கப்பட்டு உள்ளனர். தோட்டங்களில் வேலை மறுக்கப்பட்ட இளைஞர்கள் வேலை தேடி நகரங்களுக்கு வரும்போது, அவர்கள் கைது செய்யப்படுகின்றார்கள். மலையக மக்களுக்கு அடையாள அட்டையை விரைவாக வழங்குவதற்கு இன்று வரை அரசாங்கம் எதுவித நடவடிக்கையையும் மேற் கொள்ளவில்லை. இதனால், பாதுகாப்பு படையினரின் சந்தேகத்துக்கு மலையக இளைஞர்கள் தினமும், இரையாகின்றார்கள். இவை போன்ற பல காரணிகளை மலையக மக்களை கடந்த ஜனாதிபதி தேர்தலில் சந்திரிகாவுக்கு எதிராக வாக்களிக்கத் தூண்டியது. இதேவேளை மலையக மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிப்பது நல்ல முடிவாக இருக்க மாட்டாது. துரதிஸ்டவசமாக இடது சாரி சக்திகள் பிளவுண்டு இருப்பது இந்த நாட்டின் சாபக் கேடாகும். ஜனதா விமுக்தி பெரமுனையினர் மலையக மக்களின் போராட்டங்களில், அக்கறை காட்டாது இருப்பதும் வேதனையான விடயமாகும். ஐக்கியப்பட்ட இடது சாரிகளின் அமைப்பொன்றின் மூலமே மலையக மக்களின் பிரச்சினைக்கு நிரந்த தீர்வை பெறமுடியும். அரசாங்கம் தற்போது சாதாரண மக்களின் பொது வசதிகளை குறைப்பதில் அதிக ஆர்வமாக உள்ளது. அதே நேரத்தில், வங்கி, புகையிரத சேவை போன்ற முக்கிய துறைகளை தனியார் மயமாக்கவும், முடிவு செய்துள்ளது. கல்வியில் கூட சாதாரண ஏழைப்பிள்ளைகளின் நலனுக்கு குழி தோண்டப்பட்டுளளது. எனவே எதிர் காலத்தில் பல போராட்டங்கள் வெடிப்பதற்கு சந்தர்ப்பம் உள்ளது.

எனவே மலையக தொழிலாளர்களின் புதிய போராட்ட முறைகள் நன்கு திட்டமிட்டபடி நடத்தப்பட வேண்டும். வரலாறு முழுவதும் தொழிலாளர் போராட்டங்களை காட்டிக் கொடுத்த மலையக தலைமைகளை நிராகரித்து புதிய உறவுகளை தேடி மலையக தொழிலாளர்கள் விரைய வேண்டும். இந்த நாட்டில் நடக்கப் போகின்ற அனைத்து தொழிலாளர் போராட்டங்களிலும் மலையக தொழிலாளர்களும் அங்கமாக இணைக்கப்பட வேண்டும். இதன் மூலமே, உழைக்கும் மக்களின் உரிமைகள் உறுதி பெற வாய்ப்புக்கள் ஏற்படும்.

# மக்கள் விரோத நாசகார வரவு செலவுத் திட்டம்

15.2.2000ம் திகதி ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க பொது ஜன முன்னணி அரசாங்கத்தின் 6வது வரவு செலவுத்திட்டத்தினைச் சமர்ப்பித்து தனது கன்னி வரவுசெலவுத்திட்ட உரையினை நிகழ்த்தினார். வழமை போல் பிரதி நிதி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தான் சமர்ப்பிப்பார் என எதிர்பார்த்திருந்தமையால் முதன் முதலாக ஜனாதிபதி ஒருவர் அமைச்சர் அந்தஸ்தில் பாராளுமன்றத்திற்கு வருகை தந்தமை ஒரு பெரிய பேறு என சிலரால் கருதப்படலாம். ஆனால் அது ஒரு பெரிய நடிப்பு என்பது எந்தவொரு அரசியல் மாணவனுக்கும் தெரியும். நிறைவேற்று ஜனாதிபதி முறை நீக்கப்படுமென வாக்குறுதியளித்தே 1994ல் சந்திரிகா ஆட்சியைக் கைப்பற்றினார். மாறாக, அவர் ஜனாதிபதி முறையினை கட்டிக்காப்பதற்குத் தலைப்பட்டுள்ளார். அதனைத் தொடரவே முடிவு செய்துள்ளார். ஆகையாலேயே தான் நேரடியாக பாராளுமன்றத்திற்கு வந்து அமைச்சருக்குரிய ஆசனமொன்றிலிருந்து உரைநிகழ்த்தியதன் மூலம் நிறைவேற்று ஜனாதிபதி முறையினை ஜனநாயக மயப்படுத்தி பின்பு அதனை (ஆறு வருடமுடிவில்) முற்றாக நீக்கிவிடுவதே தமது நோக்கமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த வரவு செலவுத் திட்ட உரையும், அதனையொட்டி பாராளுமன்றத்திற்குள் ஜனாதிபதி ப்ாதுகாப்பு பிரிவினர் நடத்திய அதிரடிநடவடிக்கையும், பாராளுமன்ற உறுப்பினர்கள் சோதனைசெய்யப்பட்டமையும் ஒரு திரைப்படத்திற்குரிய காட்சி போல் அமைந்திருந்தது.

வரவு செலவுதிட்ட உரையினை ஜனாதிபதி சந்திரிகாவே நிகழ்த்தியதனால் ஏற்பட்ட பரபரப்பை விட வேறேதும் விசேடம் இருப்பதாக இல்லை. பரந்துபட்ட மக்களான, அதாவது தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர் மற்றும் அனைத்து உழைக்கும் மக்களுக்கு வயிற்றில் புளி கரைத்து விடப்பட்டுள்ளது. நாட்டின் சொத்துக்களை கொள்ளையிட செய்ய உத்தேசிக்கும் ப.தே.கம்பனிகளுக்கும், முதலீட்டாளர்களுக்குமே இந்த வரவு செலவுத்திட்டம் நன்மை செய்துள்ளது. அதாவது, இது வசதிபடைத்த பணமூட்டைகளுக்கு சாதகமான வரவு செலவுத் திட்டமாக விளங்குகிறது. அதே நேரத்தில் ஏற்கனவே மண்ணெண்ணெய், டீசல் ஆகியனவற்றின் விலை உயர்த்தப்பட்டதன் காரணமாக விலைவாசிகள் கிசுகிசுவென்று உயர்ந்து செல்கின்றன. வறுமையில் வாடும் மக்கள் செய்வதறியாது திணறுகின்றனர். அதே நேரத்தில் ரூ 30 பில்லியன் பெறுமதியான சொத்துக்கள் விற்பனை செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள அதேவேளை பாதுகாப்புச் செலவீனம் என்ற போர்வையில் யுத்தமும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படுவதற்காக, ஏறத்தாழ 48 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒரு புறத்தில் சமாதானத்திற்கான பேச்சுவார்த்தைகள் சர்வதேச அழுத்தங்களுடன் முன்னெடுப்பதற்கான ''ஆரவாரங்கள்''. மறுபுறத்தில் ''சமாதானத்திற்கான யுத்தம்'' எனும் யுத்தத்திற்கான வரவு செலவுத்திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. அடுத்ததாக 5 பில்லியன் சேமிக்கப்பட வேண்டும் எனவும் ஆலோசிக்கப்பட்டது. இதில் வேடிக்கையென்னவென்றால், தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதன் மூலம் யுத்த செலவீனங்கள் அற்றுப்போகச் செய்வதை விடுத்து, அதற்கு மட்டும் பெரிய தொகையினை ஒதுக்கி வைத்துவிட்டு, கல்வி, சுகாதாரம் போன்ற சமூக, நலன் புரி சேவைகளையும் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளையும் துண்டாடுவதே வரவு செலவுத்திட்டத்தின் உள் நோக்கமாகும். மக்கள் இவற்றை எதிர்த்து வீதிக்கு வரவேண்டும். இத்தகைய நாசகார, மக்கள் விரோத வங்குறோட்டுத் திட்டங்கள் முறியடிக்கப்பட வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

புதிய சமதர்மம்

Registered as a news paper in Sri Lanka



வாசகர்களே!
உங்களிடமிருந்து கருத்துக்கள், விமர்சனங்கள், ஆலோசனைகள், ஆக்கங்கள் என்வற்றை வரவேற்கிறோம்.
தொடர்புகட்கு
ஆசிரியர்
புதிய சமதர்மம்
143/3, கியு வீதி, கொழும்பு-02
தொலைபேசி: 430621, 305329 தொலைமடல் : 334822

## வயிற்றலடிக்கும் திட்டமா?

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் 6வது வரவு செலவுத் திட்டம் 15.2.2000ல் சமர்ப்பிக்கப்பட்டது.

யுத்தம் மேலும் கோரமாகத் தொடர்ந்து நடத்தப்படும் என்பதை வரவு செலவுத்திட்டம் வெள்ளிடை மலை போல் காட்டி நிற்கிறது. சென்ற வருடம் இதற்காக ஒதுக்கப்பட்டது ரூ 4777 கோடியாகும். இவ்வருடத்திற்கு ரூ 5244 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது.

சமாதானம் வேண்டும், அரசியல் தீர்வு வேண்டும் என்றெல்லாம் சர்வதேச அழுத்தங்கள் கூட முனைப்பாயிருந்த போதும் சந்திரிகா அரசாங்கம் ''சமாதானத்துக்கான யுத்தம்'' எனும் அழிவுப் பாதையிலேயே நாட்டை இட்டுச் செல்ல விழைகிறது என்றால் அது மிகையல்ல.

இந்த வரவு செலவுத்திட்டம் ஏழை எளிய மக்களை நட்டாற்றில் விட்டுவிட்டது. யார் எதைச் சொன்னாலும், விவசாயிகளுக்கு ஏமாற்றம் தான் கிடைத்துள்ளது. எதுவிதமான மானியங்களும் வழங்கப்படவில்லை. விவசாய உற்பத்தி முறையாக ஊக்குவிக்கப்படவில்லை. தொழிலாளி வர்க்கம் அணிலேற விட்ட நாய் போல் அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்க வேண்டியது தான். அதாவது தொழிலாளர் சம்பள உயர்வுக்குப் பதிலாக, சம்பள நிர்ணயக்குழு நியமிக்கப்படும் என வாக்குறுதி வழங்கப் பட்டுள்ளது. எனவே அதிக எண்ணிக்கையான சாதாரண உழைக்கும் மக்கள் வாயைக் கட்டி வயிற்றைக் கட்ட வேண்டியது தான். பணக்காரர்களும், யுத்த வியாபாரிகளும் உண்டு கொழுக்க வேண்டியதுதான்.

அடுத்ததாகப் பார்த்தால், பன்முகப்படுத்தப்பட நிதி ஒதுக்கீட்டின் கீழ் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் வழங்கும் தொகை 20 இலட்சத்திலிருந்து 2000ம் ஆண்டில் 25 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளதுடன், அடுத்த வருடம் 50 இலட்சமாக உயர்த்தப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை வடக்கு கிழக்கில் அவசர அபிவிருத்திக்கான தேவையின் நிமித்தம் இவ்வருடம் தொடக்கமே 50 இலட்சம் ஒவ்வொரு வடக்கு கிழக்கு பாராளுமன்ற உறுப்பினருக்கு மேலதிகமாக வழங்கப் படும். இது யானைப்பசிக்கு சோழப் பொரி போட்டது போலாகும். மறுபுறத்தில் யுத்தமும் அழிவும் தொடர்ந்து கொண்டிருக்கையில் அபிவிருத்தி, அபிவிருத்தி என்று கூறுவதில் என்ன அர்த்தமுண்டு. விவசாய, துறை முடங்கிக் கிடக்கிறது. மக்கள் சுதந்திரமாக நகர முடியாது. உள்ளூர்சந்தைகளுக்கிடையில் நடமாடித் தமது உற்பத்திகளைச் சந்தைப்படுத்தக் கூடிய நிலையே இல்லை. வெளிமாவட்டங்களுக்கு அனுப்புவதென்ற பேச்சுக்கே இடமில்லை. அடுத்ததாக மீன்பிடித் தொழில் கருவாடாகி விட்டது. மீனவர்களுக்கு தொழிலுமில்லை. நிவாரணமும் இல்லை. மீன்பிடிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு செயலாளர் சந்திரானந்த டி சில்வா அனுப்பிய அனுமதி உத்தரவு அங்கேயுள்ள படையினரால் உதாசீனப்படுத்தப்பட்டுள்ளது. அடுத்ததாக தொழிற்சாலைகள் உறங்கிக் கிடக்கின்றன. அவை யுத்த சூழலில் செயற்படும் நிலையில் இல்லை. எனவே வடக்கு கிழக்கில் அபிவிருத்தி என்பது செப்படிவித்தை என்றால் அது மிகையல்ல.

எல்லாவற்றிற்கும் அப்பால் அரச சொத்துக்கள் தொடர்ந்தும் அந்நிய கம்பனிகளுக்கு விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. உதாரணமாக பிரதானமான துறையாகிய தொலைபேசித் துறையைப் பார்ப்போம். ஏற்கனவே 35% ஜப்பானிய நிப்பொன் கம்பனிக்கு விற்கப்பட்டுள்ளது. பெருந் தொகையான அரச முதலீட்டுடன் நவீன நிலைக்கு கட்டியெழுப்பபட்ட ''ரெலிக் கொம்'' நிறுவனத்தை விற்க முற்பட்டதே படுபாதகமான காரியமாகும். ஆனால் தற்போது நிறுவனம் முழுவதையுமே அரசாங்கம் விற்பதற்கும் சித்தமாயிருக்கிறது. அது மட்டுமல்லாமல் குறைந்த விலைக்கு அதனைத் தட்டிக் கொள்வதற்கும் அந் நிறுவனம் சூழ்ச்சியான முறையில் காய் நகர்த்துகிறது என்றும் அறியப்படுகிறது.

எனவே வரவு செலவுத்திட்டங்கள் நாட்டுக்கு நாசத்தையே விளைவிக்கின்றன. ஜனாதிபதி, நிதிமந்திரி, பாதுகாப்புமந்திரி மூன்று பதவிகளையும் வகிக்கும் சந்திரிகா அம்மையார் 15.2.2000ல் சமர்ப்பித்த வரவுசெலவுத்திட்டமும் அவ்வழியிலானதாகும்.

## மாளிகாவத்தையில் பொலிசாரின் அடாவடித்தனம்



மாளிகாவத்தை பகுதியில் இலக்கம் 151/58 177 இல் வசிக்கும், ஏ.ஆர்.எம்.சரீப் என்பவருடைய வீடு பொலிசாரின் தாக்குதலுக்கு உள்ளானது. 9-2-2000 அன்று இரவு 8.45 மணிக்கு சிவில் உடையில் வந்தவர்கள், இவ் அடாவடித்தனத்தை புரிந்துள்ளனர். இவர்கள் மது போதையில் இருந்ததாகவும் தெரியவருகிறது. சரீப்பிடம் இருந்த 18,200 ரூபாய் களவு போயுள்ளதாகவும் அறியப்படுகிறது. வீட்டில் இருந்த ஜனாதிபதி சந்திரிகா அவர்களின் படமும், கிழித்தெறியப்பட்டதாகவும் தெரிய வந்துள்ளது. இவரது வீட்டில் இருந்த தராசு ஒன்றும் உடைக்கப்பட்டுள்ளது. மேற்படி சம்பவத்தை நேரில் கண்ட வாய் பேச முடியாத பெண் ஒருவர் சாட்சியம் அளிக்க தயாராக இருப்பதாகவும் அறியப்படுகிறது. இவ்விடயத்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யச் சென்ற போது, பொலிசார் முதலில் முறைப்பாட்டை ஏற்க மறுப்புத் தெரிவித்ததாகவும், பின்பு மேலிடத்துக்கு அறிவிக்கப் போவதாக தெரிவித்த பின்னர், முறைப்பாட்டை பெற்றுக் கொண்டதாகவும் அறியப்படுகிறது.

இது சம்பந்தமாக தொல்லை தவிர்ப்புக் குழுவுக்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. மாளிகாவத்தை பகுதியில் பெருமளவு ஏழை மக்கள் வாழும் பகுதியாகும். மக்களின் மறுவாழ்வுக்கு எத்தகைய நடவடிக்கைகளையும் எடுக்காது, அவர்களை மனம் போன போக்கில் தண்டிக்க முயல்வது அநியாயமானதாகும்.

## நீதிபதிகளை மிரட்டிய பொலிஸ் அதிகாரி

கண்டியில் பொலிசாருக்கும் நீதித்துறையினருக்கும், இடையேயான முறுகல் நிலை உச்சக்கட்டத்தினை அடைந்திருந்தது. இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தது என்று கூறப்படும் பெப்ரவரி 4ம் தேதி கண்டி வில்லியம் கோபல்லவா மாவத்தையில், வைத்து போக்குவரத்துக்கு பொறுப்பான பொலிஸ் அதிகாரி ஒருவர் உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரை தரக்குறைவாக நடத்தியுள்ளார். இவ்விடயம் தொடர்பான நடவடிக்கையாக கண்டி மகசின்கோட் நீதிபதி மேற்படி பொலிஸ் அதிகாரியை கைது செய்வதற்கான பிடியாணையை பிறப்பித்துள்ளார். கண்டி உயர் பொலிஸ் அதிகாரிகள் குறிப்பிட்ட பொலிஸ் உத்தியோகத்தரை காணவில்லை என்று கைவிரித்துள்ளனர். மேற்படி செயற்பாடுகளை கண்டித்து கண்டியில் உள்ள சட்டத்தரணிகள் மறியற் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர். சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிக்கு சார்பாக கண்டியில் உள்ள எந்த சட்டத்தரணிகளும் ஆஜராவதில்லை என்றும் சட்டத்தரணிகள் முடிவு எடுத்துள்ளனர்.

இதேவேளை கண்டி பெற்றோல் நிரப்பும் நிலையத்தில் வைத்து போக்குவரத்து பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நீதிபதியை அவமரியாதை செய்துள்ளார். பல்வேறு மட்டங்களில் இருந்து வந்த நெருக்குதலை தொடர்ந்து மேற்படி பொலிஸ் அதிகாரியை நீதிபதி முன்பு பொலிசார் நிறுத்தியுள்ளனர். இவருக்கு பிணை வழங்குமாறு கொழும்பில் இருந்து சென்ற சட்டத்தரணி வில்வராஜன், நீதிபதியை கோரியிருந்தார். இதற்கு நீதிபதி சம்மதிக்கவில்லை. பின்பு சுகயீனத்தை காரணம் காட்டி மேற்படி பொலிஸ் அதிகாரியை மருத்துவமனையில் சேர்ப்பித்துள்ளனர். மீண்டும் சுகயீனத்தை காரணம் காட்டி மேற்படி பொலிஸ் அதிகாரியை பிணையில் விடுவிக்குமாறு மாவட்ட நீதிபதியிடம் பொலிசார் வேண்டுகோள் விடுத்தனர். நீதிபதி மறுப்பு தெரிவித்துள்ளதுடன் 21ம் தேதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து பொலிசார் நீதிபதிகளின் இல்லங்களுக்கு வழங்கியிருந்த பாதுகாப்பை வாபஸ் பெற்றுள்ளனர்.

இந்த சர்ச்சையினை பின்பு பிரதம நீதியரசர் சரத் சில்வா கூட்டிய கூட்டமொன்றில் சுமுகமாக தீர்த்து வைத்ததாக செய்திகள் வெளிவந்தன. எதுவாயினும், அவசரகால சட்டம், பயங்கரவாத தடைச்சட்டம் போன்ற சட்டங்களின் கீழ் பொலிசாருக்கு வழங்கப்பட்டிருக்கும் அளவுக்கதிகமான அதிகாரங்கள் எவ்வளவு ஆணவச் செருக்கையும், தாம் சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்கள் என்ற சிந்தனையையும் அமைந்துள்ளதென்பதையே இது காட்டுகிறது. எனவே இவ்விரு சட்டங்களும் அமுலில் இருக்கும வரை ஜனநாயகம் மனித உரிமைகள் நாகரிக விழுமியங்கள் யாவும் மிதிபட்டுக் கொண்டேயிருக்கும். எனவே அனைத்து மக்களும் இனமத பேதமின்றி மேற்படி மக்கள்விரோசமிலேச்சத்தனமோ சட்டங்களை எதிர்த்து பலத்த போராட்டங்களை நடத்த வேண்டிய காலம் வந்து விட்டது.

## மேல்மாகாண சபையில் அமளி துமளி

மேல் மாகாண சபையின் மாதாந்த கூட்டத்தில் உரையாற்றிய புதிய இடதுசாரி முன்னணி உறுப்பினர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தின தமது உரையில், ''ஐக்கிய தேசியக் கட்சியின் கொடுமை தாங்க முடியாமலே, ஜனநாயக சக்திகள் ஓரணியில் திரண்டு சந்திரிகாவைப் பதவிக்குக் கொண்டு வந்தனர்.

சந்திரிகா அரசு பதவிக்கு வந்தபின்பு யுத்தம் தொடர்கிறது. தற்போது தென் இலங்கையில் கலைஞர்களுக்கு எதிராக வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. இது பற்றி சந்திரிகாவிடம் கேட்டால் உரிய பதில் இல்லை. அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் படுகொலை செய்யப்பட்டார். இதற்கும் சந்திரிகாவிடம் பதில் இல்லை. உலகத் தமிழ் அமைப்புகள் சந்திரிகாவே இக் கொலைக்கு பொறுப்பு என குற்றம் சாட்டுகின்றனர்'' என்று கூறினார். இக்கட்டத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி அங்கத்தவர்கள் குமார் பொன்னம்பலத்தின் கொலையில் சந்திரிகாவை சம்பந்தப்படுத்த வேண்டாம் என்றும் கூற்றை வாபஸ் பெறும்படியும் கூச்சலிட்டனர். தோழர் விக்கிரமபாகு வாபஸ் பெற மறுக்கவே சபை குறிப்பில் இருந்து நீக்குமாறு கோரியுள்ளனர். இதற்கு புதிய இடதுசாரி முன்னணியும், மக்கள் விடுதலை முன்னணியும் எதிர்ப்புக் காட்டவே மேல் மாகாண சபையானது 15 நிமிடங்கள் குழம்பியதாகத் தெரிய வருகின்றது.

படிப்பகம்